# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-1 • Issue-1 • நவம்பர்-2024 • November -2024 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV E_Book: www.policeparvai.com




## வெளிநாடுகளில் சைபர் அடிமைகளாக சிக்கியுள்ள 1,000 தமிழர்கள்



## முதியோர்களுக்கு சிறப்பு சேவை மைய எண் அறிவிப்பு



## மூதாட்டிக்கு உதவிய தலைமை காவலர்கள்... பாராட்டிய காவல் ஆணையர்...



## சிதம்பர ரகசியம்

கண்டிப்பாக தெரிந்து கொள்ளுங்கள்



## SP வந்திதா பாண்டே IPS, கே.மீனா SP உள்ளிட்ட 8 தமிழக போலீசாருக்கு


# மத்திய அரசின் திறன் பதக்கம்



பப்பாளி பழத்தின் மருத்துவ குணங்கள்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



நவம்பர் மாத அதிர்ஷ்டம் யார் கையில் தெரியுமா?



திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636




ROLLER
SKATING
7 Star




AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846
Tamilnadu

# போலீஸ் பார்வை

நவம்பர் 2024 மலர் 10 இதழ் 1



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L. S.ரவிச்சந்திரன் M.A., B.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், S.R.காமராஜ், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C. சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமண்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by Queen Bee CREATIVE




## நாட்டை ஆளும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல்செயல்படவேண்டும்

மன்னர் ஆட்சிக்குப் பின் மக்களாட்சி முறைப்படி மக்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் பெரும்பான்மை பெற்ற கட்சி ஆளுங்கட்சியாகவும் குறைவாக மக்கள் பிரதிநிதிகளை பெற்ற கட்சி எதிர்க்கட்சியாகவும் மக்கள் பணியாற்றி வருகின்றனர் இந்திய அரசியலமைப்பு சட்டப்படி தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் நாட்டின் இறையான்மைக்கு குந்தகம் விளைவிக்காமல் எந்த விதமான சுயநலத்திற்காகவும் தனக்காகவும் செயல்படாமல் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் சேவை பணியாற்றக்கூடிய பொது நல பாங்கோடு உணர்வு பூர்வமாக உண்மை தன்மையுடன் செயலாற்ற வேண்டும் இதுவே இதுவே அரசியல் அமைப்பு சட்டப்படி மக்களாட்சி முறைப்படி மக்கள் பிரதிநிதிகள் செயல்பட வேண்டிய நடைமுறையாகும் நாட்டையும் நாட்டு மக்களையும் ஆளக்கூடிய ஆளும்கட்சி பிரதிநிதிகள் நமது அரசு எந்த எதிர்பார்ப்புமே இல்லாமல் மக்கள் முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் பொதுநலத்தோடு செயல்பட்டு மக்கள் வாழ்வாதாரம் முன்னேற்றத்துடன் இருக்கும்படி மக்களின் தேவைகளை அறிந்து அதற்கான திட்டங்களை வகுத்து மக்கள் வரிப்பணத்தை வீணாக்காமல் பொதுநலத்தோடு மக்கள் நலத்திட்ட பணிகளுக்கு செலவிட வேண்டும் என்ற கொள்கையோடு செயல்படக்கூடிய ஆளுங்கட்சி மக்கள் பிரதிநிதிகள் தான் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் அதேபோல் ஆளுங்கட்சி அரசு மக்கள் வளர்ச்சிக்காகவும் மக்கள் நலத்திற்க்காகவும் நல்ல திட்டங்களை வகுத்து செயல்படும்போது எதிர் கட்சி கள் பிரதிநிதிகள் சுயநலமின்றி தம்மை தேர்ந்தெடுத்த மக்களின் நலத்தையும் வளர்ச்சியும் கருத்தில் கொண்டு ஆளுங் கட்சியை எதிர்க்கட்சி என்ற விரோத மனப்பான்மையை தவிர்த்து மக்கள் நலத்திற்காக ஆளுங்கட்சி வகுத்து செயல் படக்கூடிய நலத்திட்டங்களுக்கு முழு மனதோடு ஒத்துழைப்பு நல்கி மக்கள் நன்மையே நாட்டின் நலம் நாட்டின் வளர்ச்சி என்ற கருத்தோடு செயல்பட வேண்டும். அதை தவிர்த்து கட்சி பாகுபாடு பார்த்து எதிர்மறையான சிந்தனைகளோடு மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் தன்னலத்திற்க்காக தமது வளர்ச்சிக்காக செயல்படுவது தங்கள் வகிக்கும் பதவிக்கு அரசியலமைப்பு சட்டப்படி எதிரான செயல்பாடுகள் ஆகும் பொதுவாக அரசியல் கட்சிகளில் மக்கள் பிரதிநிதிகளாக தேர்தலை சந்தித்து மக்கள் பிரதிநிதிகளாக தேர்வு செய்யப் பட்டு பதவி வகிக்கும் அனைவரும் நேர்மறை சிந்தனை களோடு உண்மை தன்மையோடு ஊழலற்ற மக்கள் பணி யாற்ற வேண்டும் அதுவே மக்களாட்சியின் உண்மை தன்மை செயல்பாடாகும். அதை தவிர்த்து ஆளுங்கட்சி பிரதிநிதிகளும் எதிர்க்கட்சி பிரதிநிதிகளும் எதிரிகள் போல் பாவித்து தங்களது விரோத மனப்பான்மை செயல்பாடுகள் தவிர்த்து பொதுநலத்துடன் மக்கள் சேவை பணி ஆற்ற வேண்டும் உதாரணத்துக்கு ஆளுங்கட்சியும் எதிர்கட்சியும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல் மக்கள் பணியாற்றினால் தான் நாட்டு மக்களும் நலத்துடனும் வளத்துடனும் முன்னேற்றத்துடனும் வளர்ச்சி பெற ஏதுவாக நேர்மறை சிந்தனைகளோடு செயலாற்ற வேண்டும் என்பதே மக்களாட்சியின் உண்மைத்தன்மை.

ஆசிரியர்

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

ஆண்டு சந்தா
ரூ.200/- மட்டுமே



## கோவை மாவட்டத்தில் காவல்துறை சார்பாக

# திரு.Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் தலைமையில் மாபெரும் மக்கள் குறைதீர்க்கும் முகாம்

மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆணைக்கிணங்க பொதுமக்கள் கொடுத்த மனுக்களின் மீது விசாரணை மற்றும் ஏற்கனவே விசாரித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையில் திருப்தி அடையாத மனுக்களை கண்டறிந்து அம்மனுக்கள் மீதான மறுவிசாரணை (Re-enquiry) (30.10.2024) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.Dr.K.கார்த்திகேயன், IPS அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்றது.

மேலும் மனுக்களின் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களை நேரில் வரவழைத்து அவர்களின் மனு மீதான விசரணையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் அதிகாரிகள் மேற்கொண்டு, அம்மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது.

மக்கள் குறை தீர்ப்பு முகாமில் குடும்பப் பிரச்சனை, பணப்பரிமாற்ற பிரச்சனை மற்றும் இடப்பிரச்சினை தொடர்பான 52 மனுக்கள் மீது விசாரணை மற்றும் மறுவிசாரணை மேற்கொண்டதில், 1 மனுக்கள் மீது முதல் தகவல் அறிக்கை(FIR) பதிவு செய்யப்பட்டும், 42 மனுக்களுக்கு சுமூகமான முறையிலும், 10 மனுக்கள் மீது மேல்விசாரணை செய்ய பரிந்துரை செய்தும் தீர்வு காணப்பட்டது.

இந்த மக்கள் குறை தீர்ப்பு மனு நாளில் கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், மற்றும் காவல் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் புகார் மனுக்கள் மீது தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

பிற வேலை நாட்களில் அந்தந்த உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் காவல் நிலையங்களுக்கு சென்று பொதுமக்கள் தங்கள் குறைகளுக்கு தீர்வு காணலாம் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்கேயன் IPS அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

பொது மக்களின் குறைகளை தீர்க்கும் பொருட்டு கோவை மாவட்டத்தில் நடைபெற்ற இந்த மக்கள் குறை தீர்க்கும் முகாம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளது.

நிருபர்.P.நடராஜ், கோவை.



வந்திதா பாண்டே (ASP)

## SP வந்திதா பாண்டே IPS, கே.மீனா SP உள்ளிட்ட

# 8 தமிழக போலீசாருக்கு மத்திய உள்துறை அமைச்சக விருது

வந்திதா பாண்டே IPS (SP) (புதுக்கோட்டை), எம்.அம்பிகா (ஆய்வாளர்), கே.மீனா (SP), என்.உதயகுமார் (ஆய்வாளர்) உள்பட 8 பேர் 'மத்திய உள்துறை அமைச்சரின் திறன் பதக்கம்' பெறுகின்றனர்.

பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மத்திய ஆயுதக் காவல் படை (சிஏபிஎஃப்), மத்திய காவல் அமைப்பு (சிபிஓ) ஆகியவற்றின் 463 பணியாளர்களுக்கு 2024-ம் ஆண்டிற்கான 'மத்திய உள்துறை அமைச்சரின் திறன் பதக்கம்' அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த பணியை அங்கீகரிப்பதற்கும், உயர் தொழில்முறை தரங்களை மேம்படுத்துவதற்கும், பின்வரும் 4 துறைகளில் சம்பந்தப்பட்ட அலுவலர், அதிகாரிகளின் மன உறுதியை அதிகரிப்பதற்கும் இந்தப் பதக்கம் வழங்கப்படுகிறது.

சிறப்பு நடவடிக்கை, புலனாய்வு, நுண்ணறிவு, தடய அறிவியல் ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த விருதுகள் வழங்கப்படுகிறது.

பிரதமர் மோடி தலைமையின் கீழ், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வழிகாட்டுதல் படி, தொடங்கப்பட்ட 'மத்திய உள்துறை அமைச்சரின் திறன் பதக்கம்' அனைத்து காவல்துறையினரின் மன உறுதியைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது.

'மத்திய உள்துறை அமைச்சரின் திறன் பதக்கம்' 2024, கடந்த பிப்ரவரி 1 தேதியிட்ட உள்துறை அமைச்சகத்தின் அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டது. காவல் படைகள், பாதுகாப்பு அமைப்பு, புலனாய்வு பிரிவு, கிளை, மாநிலத்தின் சிறப்புப் பிரிவு, யூனியன் பிரதேசங்கள், சிபிஓக்கள், சிஏபிஎஃப் கள், தேசிய பாதுகாப்பு காவலர் என்எஸ்ஜி அசாம் ரைபிள்ஸ் உறுப்பினர்கள், தடய அறிவியல் (மத்திய/மாநில/யூனியன் பிரதேசங்கள்) ஆகிய துறைகளில் சிறப்பான செயல்பாடுகள், புலனாய்வில் சிறப்பான சேவை, அசாதாரணமான செயல்திறன் மற்றும் துணிச்சலான புலனாய்வு சேவை, தடய அறிவியல் துறையில் பணியாற்றும் அரசு விஞ்ஞானிகளின் பாராட்டத்தக்க பணி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த விருது வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 31ஆம் தேதி, அதாவது சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த நாளன்று இப்பதக்கம் அறிவிக்கப்படும்.

இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி தமிழ்நாட்டிலிருந்து புலனாய்வுப் பிரிவில் 7 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வந்திதா பாண்டே IPS (SP), எம்.அம்பிகா (ஆய்வாளர்), கே.மீனா (SP), என்.உதயகுமார் (ஆய்வாளர்), சி.கார்த்திகேயன் (ஏசிபி), நல்லசிவம் (ஏசிபி), எஸ்.பாலகிருஷ்ணன் (ஆய்வாளர்) ஆகியோருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
தடய அறிவியல் பிரிவில் சுரேஷ் நந்தகோபால் (துணை இயக்குநர்) என 8 பேர் 'மத்திய உள்துறை அமைச்சரின் திறன் பதக்கம்' விருது பெறுகின்றனர்.

போலீஸ் பார்வை மாத இதழ் சார்பில் விருது பெற்ற அதிகாரிகளுக்கு மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம். விருது பெற்றவர்களின் முழுமையான பட்டியல் மத்திய உள்துறை அமைச்சகத்தின் https://www.mha.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது.

# அய்யாபுரம் காவல் நிலையத்தில் SP திரு.V.R.ஸ்ரீ னிவாசன் திடீர் ஆய்வு



தென்காசி மாவட்டம், அய்யாபுரம் காவல் நிலையத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.V.R.ஸ்ரீ னிவாசன் அவர்கள் திடீர் ஆய்வினை மேற்கொண்டார்.

இதில் காவல் நிலையத்தின் முக்கிய கோப்புகள் மற்றும் ஆயுதம் வைப்பறை ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் பொதுமக்களிடம் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் பணியின் போது காவல்துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்தும் அறிவுரைகள் வழங்கினார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுரைகள் வழங்கிக் கொண்டிருந்த போது திடீரென காவல் நிலைய தொலைபேசி ஒலிக்கவும், பெண் முதல் நிலை காவலர் - 1318 திருமதி.முருகேஸ்வரி என்பவர் தொலைபேசியை எடுத்து பேசி, உடனடியாக ரோந்து காவலருக்கு தகவல் தெரிவித்து சம்பவ இடத்திற்கு அனுப்பினார். இதை கவனித்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுரைகள் வழங்கிக் கொண்டிருந்தபோதும் நிலையத்திற்கு வந்த தொலைபேசி அழைப்பை அலட்சியப்படுத்தாமல் அழைப்பை எடுத்து அதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொண்ட பெண் காவலர் முருகேஸ்வரியின் செயலை பாராட்டி உடனடியாக வெகுமதி வழங்கினார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.R.ஸ்ரீ னிவாசனின் இச்செயல் காவல்துறையினர் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றது.

K.அருணாச்சலாம், தென்காசி.

---



3.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 5 .30 மணியளவில் திருவண்ணாமலை அண்ணா நுழைவு வாயிலில் இருந்து அடி அண்ணாமலை ஆரம்ப சுகாதார நிலையம் வரை கீழ்பெண்ணாத்தூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் நடப்போம் நலம் பெறுவோம் என்ற நிகழ்ச்சி மாவட்ட சுகாதார அலுவலர் மற்றும் வட்டார மருத்துவ அலுவலர் அவர்களின் உத்தரவின் படி நடைபெற்ற நிகழ்ச்சியில் அனைத்து சுகாதார ஆய்வாளர்களும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களும் MLHP ,WHV ,NCD staff nurse மற்றும் அனைத்து அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

சிறப்பு நிருபர்: இரா.சக்திவேல், திருவண்ணாமலை.




**கோபிசெட்டிபாளையம் போக்குவரத்து காவலரும், சர்வதேச விளையாட்டு வீரருமான, சரவணகுமார் ஒருங்கிணைப்பாளராக முன் நின்று நடத்திய**

# மாநில அளவிலான வலுத்தூக்கும் போட்டி

கடந்த செப்டம்பர் மாதம் 22ஆம் தேதி, கவுந்தப்பாடி ஜம்ஜம் ரிசார்ட்டில், மாநில அளவிலான, வலுத்தூக்கும் போட்டி, அமெச்சூர் பவர்லிப்டிங் அசோசியேசன், கோயம்புத்தூர் சார்பாக, அகில இந்திய அளவிலான போட்டிக்கு, தேர்வு செய்யும் அயர்ன் எம்பயர் கிளாசிக், 2024 ஸ்டார் மேன் போட்டி சிறப்பாக நடைபெற்றது.

இதில் 250-க்கும் மேற்பட்ட வீரர்கள், மாநில அளவில் இருந்து கலந்து கொண்டார்கள். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள், அகில இந்திய போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டார்கள். இதில் உலக சாம்பியன்கள், திரு.எஸ்.பி. நாகராஜன், திரு. ராஜசேகர், உலக ஆணழகன்கள், திரு.யாசர் அரஃபத் மற்றும் திரு. ரேன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக, கோபிசெட்டி பாளையம் போக்குவரத்து தலைமை காவலர் மற்றும் சர்வதேச விளையாட்டு வீரருமான, திரு.சரவணகுமார் மற்றும் கவுந்தப்பாடி சரவணா ஜிம் உரிமையாளர் கௌசல்யா, பயிற்சியாளர்கள் சந்தோஷ் மற்றும் வர்ஷினி ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

விழாவினை தலைமையேற்று, போலீஸ் பார்வை மாத இதழ் செய்தியாளர் மற்றும் சமூக ஆர்வலமான, திரு.JC.FA.கவுந்தி கண்ணன், முன்னாள் ராணுவ வீரர், பாவேந்தன் ஸ்போர்ட்ஸ் செங்கோட்டையன், கவுன்சிலர் திரு.செங்கோட்டுவேலு, முன்னாள் ஆவின் மேலாளர் தங்கவேலு, வணிகர் மாதேஸ்வரன் ஆகியோர் பரிசளித்து வீரர்களை உற்சாகப்படுத்தினார்கள். சிறப்பு விருந்தினர்களாக, கட்டிட இன்ஜினியர் திரு.கோவிந்தராஜ், திரு.மலர் கண்ணன், கோபிசெட்டிபாளையம் முகம் அறக்கட்டளை திரு. மனோகரன், ஆதி பில்டர்ஸ் ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களை வாழ்த்தினர்.

திமுக வடக்கு மாவட்ட செயலர் திரு. நல்லசிவம், ஒன்றிய செயலர் திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் வீரர்களுக்கு உணவு வழங்கினர்.

அதிமுக ஐடி விங், திரு.நல்லி விவேகானந்தன் வீரர்களுக்கு, 3 ஸ்போர்ட்ஸ் சைக்கிள்கள் வழங்கினார். கோபிசெட்டிபாளையம் ரோட்டரி சங்கத்தினர், வீரர்களுக்கு கேடயங்களை வழங்கினர். பாட்டப்பன் மற்றும் ஹரி ராகவேந்திரா நிகழ்ச்சி ஏற்பாடுகளுக்கு, உறுதுணையாக இருந்தனர்.

போட்டிக்கான நடுவராக சர்வதேச விளையாட்டு வீரர் மற்றும் அமெச்சூர் கோயம்புத்தூர் பவர் லிப்டிங் அசோசியேசன் நடுவர் கார்வேந்தன் நடைபெற குழுவுக்கு தலைமையேற்று, தேசிய அளவிலான போட்டிக்கு, வீரர்களை தேர்வு செய்தனர்.

தலைமை நிருபர்: கவுந்தி கண்ணன், ஈரோடு.



# பயங்கர ஆயுதங்களுடன் கூலிப்படையினர் கைது

## அசம்பாவிதம் ஏற்படும் முன் தடுத்து நிறுத்திய கரூர் மாவட்ட காவல்துறையினர்

கரூர்மாவட்டம் காவல்துறை தான்தோன்றிமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கள்ள உறவு தொடர்பான பிரச்சனையில் பழிவாங்கும் நோக்கத்துடன் அரிவாள், துப்பாக்கிகள் வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், மத்திய மண்டல காவல் துறை தலைவர், திருச்சி சரக துணைத் தலைவர் ஆகியோரின் அறிவுறுத்தியபடி, கரூர் SP திரு.K.பெரோஸ்கான் அப்துல்லா அவர்களின் உத்தரவில், கரூர் நகர உட்கோட்ட DSP திரு.செல்வராஜ் அவர்கள் மேற்பார்வையில், காவல் ஆய்வாளர்கள் திரு.மணிவண்ணன் (கரூர் நகரம்), திரு.முத்துக்குமார் (பசுபதிபாளையம்) ஆகியோர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

இந்த தனிப்படை போலீஸார் வடக்கு காந்திகிராமம் சாய்பாபா நகரைச் சேர்ந்த மீனாட்சி சுந்தரம் மகன் முகேஷ் (எ) ராமசுப்பிரமணி, நாமக்கல் முதலைப்பட்டி ராஜாசின்ன மகன் ரஞ்சித் சக்கரவத்தி, திருச்சி ஸ்ரீ ரங்கம் பெரியசாமி மகன் கோபால் (எ) பெரியகோபால், காங்கேயம் வீரமாத்தி தோட்டத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் ஒட்டக்காடு செந்தில் (எ) சின்னசாமி, ஈரோடு சென்னிமலை சுப்ரமணியம் மகன் யுவராஜ், ஈரோடு வெள்ளாளப்பாளையம் பொன்னுசாமி மகன் மூர்த்தி, கரூர் கோட்டணன் கோவில் தெருவைச் சேர்ந்த செல்வம் மகன் பாலு (எ) பாலகிருஷ்ணன் ஆகியோரை கைது செய்தனர்.



அவர்களிடமிருந்து 2 கை துப்பாக்கிகள், 6 தோட்டாக்கள் மற்றும் அரிவாள்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்ததுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். தகவலின் பேரில் கரூர் காவல் துறை முயற்சியால் அசம்பாவிதம் ஏதும் நிகழாமல் தடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நிருபர்: M.நபிமுகம்மது, கரூர்



## கிட்னி முத்திரை

**சுண்டு விரலின் நுனியையும், மோதிர விரலின் நுனியையும் பெருவிரலின் அடியில் வைத்து, அந்த விரல்களின் பின்புறத்தை மெதுவாகப் பெருவிரலால் அழுத்தவும். தேவையற்ற நீர் அகன்று, உடல்சூட்டை அதிகப்படுத்தும். நெஞ்சு சளி, சிறுநீரகப் பிரச்சினை தீரும். சம்மணகாலிட்டு அமர்ந்து தினமும் இரண்டு கைகளிலும் 10 நிமிடம் செய்க...**




செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438




# கொடைக்கானலில் போக்குவரத்து நெரிசலை குறைக்க, ஆக்கிரமிப்புகளை அகற்ற அதிகாரிகள் ஆய்வு

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அழகிய சுற்றுலா ஸ்தலம் என்பதால் வெளிநாடுகளிலிருந்தும் வெளிமாநிலங்களிலிருந்தும் பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலால் மக்கள் அவதிபடுவதை தவிர்க்க ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக, சுற்றுலா தலங்களின் வளர்ச்சி குறித்து மாநில சுற்றுலா வளர்ச்சி துறை செயலாளர் கொடைக்கானலில் நேரடி ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர், DRO, திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கொடைக்கானல் கோட்டாட்சியர், வட்டாட்சியர், காவல்துறை, சுற்றுலாத்துறை அதிகாரிகள் அனைத்து அரசு துறை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்

## திருட்டு வழக்குகளில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கைது செய்த

# தனிப்படை போலீஸாரை பாராட்டிய புதுக்கோட்டை SP வந்திதா பாண்டே IPS

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிமளம், திருமயம், நமணசமுத்திரம் ஆகிய காவல் சரகத்திற்குப்பட்ட 11 பகுதிகளில் திருட்டு வழக்குகளில் எதிரிகளை விரைந்து பிடிக்க புதுக்கோட்டை SP திருமதி.வந்திதா பாண்டே IPS, அவர்கள் உத்தரவின் பேரில் தனிப்படை அமைத்த நிலையில், தனிப்படை காவல்துறையினர் அதிரடியாக செயல்பட்டு 5 எதிரிகளை கைது செய்து அவர்களிடமிருந்து 100 கிராம் தங்கம், 5 கிலோ வெள்ளிக்கட்டிகள், 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் 2 நான்கு சக்கர வாகனங்களை பறிமுதல் செய்து எதிரிகளை சிறையில் அடைத்தனர். மேலும் குற்றவாளிகளை விரைவாக பிடித்து சிறப்பாக செயல்பட்ட தனிப்படையினரை புதுக்கோட்டை SP அவர்கள் நேரடியாக அழைத்து வெகுவாக பாராட்டினார்கள். நிருபர்: A.K.ஷாஜஹா, புதுக்கோட்டை









## தலைமை காவலர்கள் பிரசாந்த், நாகேந்திரனை பாராட்டிய காவல் ஆணையர் திருமதி.லட்சுமி IPS அவர்கள்

திருப்பூர் KVR நகர் பகுதியில் ஆதரவற்ற அமுதா என்ற ஒரு மூதாட்டிக்கு இருக்க இடம் இல்லாமல் மரத்தடியில் வசித்துக் கொண்டிருந்த நிலையில் திருப்பூர் மத்திய காவல் நிலையத்தில் தலைமை காவலர்கள் பிரசாந்த், நாகேந்திரன் அவர்களின் சொந்த செலவில் உணவும், சிறிய ஷெட் வீடும் அமைத்து கொடுத்ததை அறிந்த திருப்பூர் மாநகர காவல் ஆணையர் திருமதி.லட்சுமி IPS அவர்கள் நேரில் தலைமை காவலர்களை நேரில் அழைத்து பாராட்டி பரிசு வழங்கினார். இந்த மனித நேயத்தை பாராட்டி போலீஸ் பார்வை இதழ் குழுமம் சார்பாக அவருக்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செய்யப்பட்டது. மேலும், இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் காவலர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு எங்களது நன்றியும் தெரிவித்துக் கொண்டோம். திருப்பூர் போலீஸ் பார்வை குழுமம்



# அருந்தமிழ் மருத்துவம் 500

**இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், இதுதான் மருந்து, புதிய கண்டுபிடிப்பெல்லாம் கிடையாது, ஒருதடவை சொன்னா சொன்னதுதான், இந்த பாடலை ஒவ்வொரு வரும் எழுதிவைத்து கொள்ளுங்கள், எக்காலத்திலும் உதவும், இப்பாடல் அருந்தமிழ் மருத்துவம் 500 என்ற பாடலில் இருந்து எடுக்கப்பட்டது.**

மூளைக்கு வல்லாரை
முடிவளர நீலிநெல்லி
ஈளைக்கு முசுமுசுக்கை
எலும்பிற்கு இளம்பிரண்டை

பல்லுக்கு வேலாலன்
பசிக்கு சீரக மிஞ்சி
கல்லீரலுக்கு கரிசாலை
காமாலைக்கு கீழாநெல்லி

கண்ணுக்கு நந்தியாவட்டை
காதுக்கு சுக்குமருள்
தொண்டைக்கு அக்கரகாரம்
தோலுக்கு அருகுவேம்பு

நரம்பிற்கு அமுக்குரான்
நாசிக்கு நொச்சிதும்பை
உரத்திற்கு முருங்கைப்பூ
ஊதலுக்கு நீர்முள்ளி

முகத்திற்கு சந்தனநெய்
மூட்டுக்கு முடக்கறுத்தான்
அகத்திற்கு மருதம்பட்டை
அம்மைக்கு வேம்புமஞ்சள்

உடலுக்கு எள்ளெண்ணை
உணர்ச்சிக்கு நிலப்பனை
குடலுக்கு ஆமணக்கு
கொழுப்பெதிர்க்க
வெண்பூண்டே
கருப்பைக்கு அசோகுபட்டை
களைப்பிற்கு சீந்திலுப்பு
குருதிக்கு அத்திப்பழம்
குரலுக்கு தேன்மிளகே!

விந்திற்கு ஓரிதழ்தாமரை
வெள்ளைக்கு கற்றாழை
சிந்தைக்கு தாமரைப்பூ
சிறுநீர்க்கல்லுக்கு
சிறுகண்பீளை

கக்குவானுக்கு வசம்புத்தூள்
காய்ச்சலுக்கு நிலவேம்பு
விக்கலுக்கு மயிலிறகு

வாய்ப் புண்ணிற்கு மணத்தக்காளி
நீர்க்கோவைக்கு சுக்கு மிளகு நீர்
நீரிழிவிற்கு ஆவாரைக் குடிநீர்
வேர்க்குருவிற்கு பனைநுங்கு நீ
வெட்டைக்கு சிறுசெருப்படையே

தீப்புண்ணா குங்கிலியவெண்ணை
சீழ்காதுக்கு நிலவேம்பு
நாப்புண்ணிற்கு திரிபலாவேலன்
நஞ்செதிர்க்க அவரிஎட்டி

குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான்
குருதி கக்கலுக்கு இம்பூரல்வேர்
பெரும்பாட்டிற்கு அத்திநாவல்
பெருவயிறுக்கு மூக்கிரட்டை
கக்கலுக்கு எலுமிச்சை ஏலம்
கழிச்சலுக்கு தயிர்சுண்டை
அக்கிக்கு வெண்பூசனை
ஆண்மைக்கு பூனைக்காலி

வெண்படைக்கு பூவரசு கார்போகி
விதைநோயா கழற்சிவிதை
புண்படைக்கு புங்கன்சீமையகத்தி
புழுகுடற்கு வாய்விளங்காமணக்கு

கால்வெடிப்பா மருதாணிகிளிஞ்சல்
கரும்படை வெட்பாலைசிரட்டை
கால்சொறிக்கு வெங்கார பனிநீர்
கானாகடிக்கு குப்பைமேனிஉப்பே

உடல் பெருக்க உளுந்து எள்ளு
உளம் மயக்க கஞ்சா கள்ளு
உடல்இளைக்க தேன்கொள்ளு
உடல் மறக்க இலங்கநெய்யே

அருந்தமிழர் வாழ்வியலில்
அன்றாடம் சிறுபிணிக்கு
அருமருந்தாய் வழங்கியதை
அறிந்தவரை உரைத்தேனே!!



# முதல் மொழி தமிழ்!

## இதோ ஆதாரம்

W.W.Skeat என்பவர், The Etymological dictionary of the English language இல் உள்ள 14,286 சொற்களில் 12,960 வார்த்தைகள் தமிழிலிருந்து வந்தவை (அதாவது 90% வார்த்தைகள் தமிழிலிருந்து வந்தவை) என்கிறார் ஆய்வின்படி எடுத்துகாட்டுகள்:

Cry – ''கரை'' என்ற தூயத் தமிழிலிருந்து வந்தது. கரைதல் என்றால் கத்துதல். காக்கைக் கரையும் என்பர்.

Clay – களி (களிமண்) என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தது.

Blare – ''பிளிறு'' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தது.

Culture – கலைச்சாரம் என்பதிலிருந்து வந்தது

இதுமட்டுமல்ல இலத்தின், கிரேக்கம், செர்மன் மொழிகள் போன்ற பலவும் தமிழ் மூலத்திலிருந்து வந்தவை பின் ஒன்றோடொன்று கலந்து பலச் சொற்களை உருவாக்கிக் கொண்டன என்று சொல் ஆய்வாளர்கள் உறுதிசெய்கின்றனர்.

ஆதாரம் : ''உலகமொழிகளில் தமிழ்ச்சொற்கள்'' – ப.சண்முகசுந்தரம். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு.

தமிழ் உலக மொழிக்கெல்லாம் தாய் மொழி, உலக கலாச்சாரங்களின் தொட்டில், உலக நாகரீகங்களின் ஊற்று, உலகத்தில் உள்ள மதங்களின் தொடக்கம் தமிழ்!

The mother of all languages is the TAMIL language ; the cradle of all cultures ; all religions and all civilizations !

தமிழ் மொழியில் இருந்து வந்த ஒரு மொழியே ஆங்கிலம்.

S + பேசு = speach

S + பஞ்சு = sponge

S + மெது = smooth

S + பரவி = spray

S + உடன் = sudden

S + நாகம் = snake

S + சேர்த்தால் (ஸ் சத்தம் )

600-க்கு மேட்பட்ட தமிழ் சொற்களுக்கு ஒரே அர்த்தம் உள்ள ஆங்கில சொற்கள் வரும்.

உருளை = roll

(கல் கவியல் ஆக கணக்கு பார்க்கும் தமிழர் முறை ) கற்குவியல் = Calculation ; calculatrice .

கொல் = kill ( தமிழில் "கொ " வரும் இடத்தில் "K" ஆங்கிலத்தில் போட்டால் 100 english word வரும்)

"பொத்தல்"ல இருந்து பொத்தான் = Button

உலகில் உள்ள, இருந்த அனைத்து மொழிகளிலும் தமிழ் மொழி இருக்கின்றது. ஆங்கிலத்தில் 20 % தமிழ் மொழி உள்ளது. ஆங்கிலத்தின் தாய் மொழியான லத்தீன், நாடு; கிரேக்கம் = 50 % தமிழ் மொழி உள்ளது.

2015 ஆய்வுகளின் படி:

(Germany-ல் உள்ள மொழி ஆய்வு பல்கலைக் கழகத்தில் படிப்பிக்கின்றார்கள். Germain மொழியின் தாய் மொழி சமஸ்கிரதம் என்றும் (ஐரோப்பிய மொழிகளின் தாய் மொழி சமஸ்கிரதம் என்றும் கூறுகிறார்கள்).

லத்தீன் , கிரேக்கத்தின் தாய் மொழியான சமஸ்கிரதம் ஒரு தமிழர் கண்ட எழுத்து மொழி.

("நிறைமொழி" மாந்தர் ஆணையில் கிளர்ந்த "மறைமொழி" தானே மந்திரம் என்ப ) என்கிறது தொல்காப்பியம்.

நிறைமொழி – தமிழ்

மறைமொழி – சமஸ்கிரதம்

– சமஸ்கிரதம் என்றால் அர்த்தம் செய்யப்பட்ட மொழி. – இயற்கிரதம் ( தமிழ் ) என்றால் அர்த்தம் இயற்கையான மொழி )

சமஸ் + கிரதம் என்றால்: செய்யப்பட்ட மொழி

சம = சமைத்தல் = செய்

கிரதம் = பாஷை = மொழி.

இயற் + கிரதம் என்றால் தமிழ் மொழி (இறை மொழி , இயற்கையான மொழி )

இயற் = இயற்கை

கிரதம் = மொழி

சீனர்களின் மண்டரின் மொழி மற்றும் யூதர்களின் ஹிபுரு'வின் தாய்மொழி அரபி = 65 % தமிழ் மொழி உள்ளது.

கீபுருவின் தாய் மொழி அரமைட், அரபு மொழியின் தாய் மொழி zero-அரமைட். அரமைட், zero – அரமைட்= 80 % தமிழ் மொழி உள்ளது. தமிழ் மொழி பிறந்த இடத்தில் இருந்து 1,000 வருடங்களுக்கு ஒரு முறை மொழி சிதையும், மேலும் 1,000 Km க்கு தூரத்திற்கு ஒரே மொழி நிச்சயம் சற்று வேறுபடும்!

"ழ" உச்சரிப்பு தமிழ், மலையாளம், மண்டரீன் சீனா ஆகிய மூன்று மொழிகளில் மட்டுமே உள்ளது. 1,500 வருடங்களுக்கு முன் தெலுங்கு என்ற ஒரு தனி மொழி இல்லை! தாய் தமிழகத்தின் ஒரு தமிழ் பகுதியே இன்றைய தெலுங்கு. ''தெள்ளு தமிழ் பாடி தெளிவோனே'' என்று முருகனை புகழ்கிறது திருப்புகழ்.

1,000 வருடங்களுக்கு முன் கன்னடம் என்ற ஒரு தனி மொழி இல்லை! தாய் தமிழகத்தின் ஒரு தமிழ் பகுதியே இன்றைய கன்னடம். 700 வருடங்களுக்கு முதல் மலையாளம் என்ற ஒரு மொழி இல்லை! தாய் தமிழகத்தின் ஒரு தமிழ் பகுதியே இன்றைய மலையாளம்.

அம்மா, அப்பா என்ற தமிழ் சொல் இன்று உலகில் உள்ள 200 மொழிகளில் உள்ளது. தமிழில் மட்டும் தான் சொற்களுக்கு பொருள் வரும். கட்டுமரம் என்ற தமிழ் சொல் உலகில் உள்ள அனைத்து (7,102 ) மொழிகளிலும் கட்டுமரம் தான். மரத்தை கட்டுவதால் கட்டு மரம். இன்று உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் "கட்டு மரம்" தான்.

தமிழ் மொழியில் உள்ள தொன்மையான நூல்கள் போல வேறு எந்த மொழியிலும் இல்லை. இன்று இருக்கும் பழமையான நூல்களில், யூத இனத்தில் உள்ள தொன்மையான நூல் "தோரா" (கி.மு 2,000 ஆண்டுகள்) ஒன்று மட்டுமே உள்ளது. ஆனால் நம் தமிழ் மொழியில் உள்ள தொன்மையான பல

நூல்கள்: கி.மு 1000 ஆண்டுகள் – திருக்குறள், கி.மு 2000 ஆண்டுகள் – தொல்காப்பியம், கி. மு 3000 ஆண்டுகள் திருமந்திரம், கி.மு 5000 பரிபாடல், கி.மு 7000 அகத்தியம் போன்ற நூல்கள் உள்ளன. மேலும் பழமையான நூல்கள் கடல் கோளாலும், சூழ்ச்சிகளாலும் அழிந்து விட்டன.

தமிழ் வாழ்க!

# 60 வயது நிரம்பியோருக்கு மகிழ்ச்சியான செய்தி




தமிழக அரசு இந்த திட்டத்தின் கீழ் 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மூத்த குடிமக்களுக்கும் உதவும் முறையில் 14567 என்ற கட்டணமில்லா எண் அறிவித்துள்ளது. இது உண்மையாகவே ஒரு வரலாற்று சிறப்புமிக்க சேவை மையம்.

இந்த எண்ணில் நான் தொடர்பு கொண்டேன். எதிர்முனையில், நமக்கு என்ன குறை என்று கேட்டார்கள். அதாவது, பிள்ளைகள் சரிவர பராமரிப்பதில்லையா, ஓய்வூதியம் பெறுவதில் ஏதாவது தடை உள்ளதா அல்லது வங்கிகள் தொடர்பான நிர்வாக குறைபாடு ஏதும் இருப்பின் கூறுங்கள் என்றனர்.

இந்த சேவை மையம் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை குறைதீர் மையமாக செயல்பட தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் மூத்த குடிமக்கள் எங்கு சென்றாலும் நிதானமாகவும் பாதுகாப்பாகவும் செல்வது அல்லது அவ்வாறு செல்வதில் உள்ள தடை போன்றவற்றை 14567 என்ற எண்ணை தொடர்பு கொண்டு கூறினால், நமக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாமல், நமது உயிருக்கு பாதுகாப்பாக சிறந்த வழிகாட்டியாக பதிலளிக்கின்றனர். தமிழக அரசு கொண்டு வந்துள்ள இந்த வசதியை அனைத்து மூத்த குடிமக்களும் வரவேற்றுள்ளனர். அனைவரும் இதனை பயன்படுத்திக் கொள்ளவும்.

எந்த வேலைக்கும் எந்த அச்சமும் இன்றி நம்முடன் எப்பொழுதும் ஒரு உதவியாளர் இருப்பது போல் இந்த சேவை எண் 14567 அழைக்கலாம் என தெரிவித்துக் கொள்கிறேன். பயன்படுத்திக் கொள்ளுங்கள், பயன் பெறுங்கள்.

**பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஒரு மூத்த குடிமகன் ஒருவரின் அனுபவம்**

வணக்கம். நான் சற்றுமுன்பு இந்த நம்பரில் தொடர்பு கொண்டு பேசினேன்.

எதிர்முனையில் பேசிய பெண்மனி என்னிடம் பெயர் ஊர் விலாசம் கேட்டார்கள். உங்களுக்கு என்ன குறை என்று கேட்டபோது, எனக்கு 4 மாத DA அரியர் கிடைக்கவில்லை என்றேன்.

எங்கு வேலை செய்து ஓய்வு பெற்றீர்கள்? என்று கேட்டபோது அனைத்து விபரத்தையும் சொன்னேன்.

நாளை காலையில் அவர்களுடைய டீம் நேரடியாக ஜிப்மரில் உள்ள ஸ்டேட் வங்கிக்கு சென்று விசாரனை செய்து நடவடிக்கை எடுப்பதாக சொன்னார்கள். உடல்நலம் பற்றியும் உடம்பில் வேறு ஏதாவது குறைபாடுகள் இருந்தால் சொல்லுங்கள், உதவி செய்கிறோம் என்று மிகபரிவுடன் கேட்டார்கள்.

உங்கள் பிள்ளைகள் உங்களை கவணித்துக் கொள்கிறார்களா? அருகில் இருக்கிறார்களா? தூரத்தில் இருக்கிறார்களா? என்று மிக அக்கறையுடன் விசாரித்தார்கள்.

எந்த குறையிருந்தாலும் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். இந்த முதியோர் குறைதீர்க்கும் சேவை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுத்துகிறது என்று சொன்னார்கள். நண்பர்களே உங்களுக்கும் ஏதாவது குறையிருந்தால் இந்த 14567 ல் தொடர்பு கொள்ளவும்.



# சிதம்பர ரகசியம்

பல கோடி டாலர்கள் செலவு செய்து எட்டு ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து சிதம்பரம் நடராஜர் கால் பெருவிரலில்தான் மொத்த பூமியின் காந்த மையப்புள்ளி இருப்பதாக உலக நாடுகள் கண்டுபிடித்துள்ளன. Centre Point of World's Magnetic Equator. எந்த செலவும் செய்யாமல் எந்த டெலஸ்கோப்பும் இல்லாமல் இதனை கண்டறிந்த நமது தமிழன் எப்பேற்பட்ட அறிவுமிக்கவன்..? அதை உணர்ந்து அணுத்துகள் அசைந்துகொண்டே இருக்கும் என்ற உண்மையை ஆடும் நடராஜர் வாயிலாக உணர்த்தும்படி சிலை அமைத்து பூமியின் மையப்புள்ளியில் மறைமுகமாக அமர்த்திய அவன் சாதனை எப்பேற்பட்டது?

இதனை 5000 வருடங்களுக்கு முன்பே கண்டறிந்து திருமந்திரத்தில் குறிப்பிட்ட திருமூலரின் சக்தி எப்படிப்பட்டது? புரிகிறதா..? தமிழன் யார் என தெரிகிறதா..? திருமூலரின் திருமந்திரம் மிகப்பெரிய உலகிற்கே வழிகாட்டும் அறிவியல் நூலாகும் இதை உணர்ந்துகொள்ள தற்போதுள்ள அறிவியலுக்கு இன்னும் ஒரு நூற்றாண்டு தேவைப்படலாம்..வாழ்க தமிழ்..வெல்க... தமிழனின் நுண்ணறிவு!

சிதம்பரம் நடராஜர் கோயில் ரகசியம் என்று பலரும் பல விசயங்களை கூறிவரும் வேளையில், அந்த கோயிலில் இருக்கும் அறிவியல், பொறியியல், புவியியல், கணிதவியல், மருத்துவவியல் குறித்த ஆச்சர்யங்களின் சில தகவல்கள்.

முன்னோர்கள் செய்த எல்லா செயல்களும் ஒரு தெளிவான சிந்தனையை நோக்கியே பயணித்துள்ளது, அப்படி இருக்க அவர்கள் நிர்ணயித்த பிரம்மாண்டமான கற்கோவில்களுக்கு பின் இருக்கும் சில அற்புதங்களை அதனிலடங்கும். அந்த வகையில் சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள சில அற்புதமான ரகசியங்கள் இவைகள் தான்.

(1) இந்த கோயில் அமைந்திருக்கும் இடமானது உலகின் பூமத்திய ரேகையின் சரியான மையைப் பகுதி என்று கூறப்படுகின்றது. ( Center Point of World's Magnetic Equator ).

(2) பஞ்ச பூத கோயில்களில் ஆகாயத்தை குறிக்கும் தில்லை நடராஜர் ஆலயம், காற்றை குறிக்கும் காலஹஸ்தி ஆலயம், நிலத்தை குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வர ஆலயமும் சரியாக ஒரே நேர்கோட்டில் அதாவது சரியாக 79 Degrees, 41 minutes East தீர்க்க ரேகையில் (LONGITUDE ) அமைந்துள்ளது, இன்று Google map உதவியுடன் நாம் வானத்தின் மேல் இருந்து பார்ப்பதை போன்று பார்த்தால் மட்டுமே விளங்கும் இந்த துல்லியம் அன்றைக்கு கணிக்கப்பட்டது ஒரு பொறியியல்,புவியியல் மற்றும் வானவியியலின் உச்சகட்ட அதிசயம்.

(3) மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் சிதம்பரம் கோயிலில் 9 நுழைவு வாயில்களும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களை குறிகின்றது.

(4) விமானத்தின் மேல் இருக்கும் பொற் கூரை 21,600 தங்கத்தகடுகளை கொண்டு வேயப்பட்டுள்ளது, இது மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21600 தடவைகள் சுவாசிக்கிறான் என்பதை குறிக்கின்றது (15*60*24 = 21,600).

(5) இந்த 21,600 தகடுகளை வேய 72,000 தங்க ஆணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, இந்த 72,000 என்ற எண்ணிக்கை மனித உடலில் இருக்கும் ஒட்டுமொத்த நாடிகளை குறிக்கின்றது.இதில் கண்ணுக்குத் தெரியாத உடலின் பல பாகங்களுக்கு சக்தியை கொண்டு சேர்ப்பவையும் அடங்கும்.

(6) திருமந்திரத்தில் திருமூலர்


மானுடராக்கை வடிவு சிவலிங்கம்; மானுடராக்கை வடிவு சிதம்பரம்; மானுடராக்கை வடிவு சதாசிவம்; மானுடராக்கை வடிவு திருக்கூத்தே, என்று கூறுகிறார்,

அதாவது மனிதன் வடிவில் சிவலிங்கம், அதுவே சிதம்பரம், அதுவே சதாசிவம், அதுவே அவரின் நடனம் என்ற பொருளைக் குறிகின்றது.

(7) ''பொன்னம்பலம்'' சற்று இடது புறமாக அமைக்கப்பட்டுள்ளது, இது நம் உடலில் இதயத்தை குறிப்பதாகும்.இந்த இடத்தை அடைய ஐந்து படிகளை ஏற வேண்டும், இந்த படிகளை ''பஞ்சாட்சர படி'' என்று அழைக்கப்படுகின்றது, அதாவது 'சி,வா,ய,ந,ம' என்ற ஐந்து எழுத்தே அது. ''கனகசபை'' பிற கோயில்களில் இருப்பதை போன்று நேரான வழியாக இல்லாமல் பக்கவாட்டில் வருகின்றது. இந்த கனக சபை தாங்க 4 தூண்கள் உள்ளன, இது 4 வேதங்களை குறிக்கின்றது,

(8)பொன்னம்பலத்தில் 28 தூண்கள் உள்ளன, இவை 28 ஆகமங்களையும், சிவனை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன, இந்த 28 தூண்களும் 64 + 64 மேற் பலகைகளை கொண்டுள்ளது (BEAM), இது 64 கலைகளை குறிக்கின்றது, இதன் குறுக்கில் செல்லும் பல பலகைகள்(CROSS BEAMS) , மனித உடலில் ஓடும் பல ரத்த நாணங்களை குறிக்கின்றது.

(9) பொற்கூரையின் மேல் இருக்கும் 9 கலசங்கள், 9 வகையான சக்தியை குறிக்கின்றது.அர்த்த மண்டபத்தில் உள்ள 6 தூண்கள், 6 சாஸ்திரங்களையும்,அர்த்த



மண்டபத்தின் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் உள்ள 18 தூண்கள், 18 புராணங்களையும் குறிக்கின்றது.

(10) சிதம்பரம் நடராஜர் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்த தாண்டம் என்ற கோலம் ''cosmic dance'' என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. விஞ்ஞானம் இன்று சொல்வதை இந்துமதம் அன்றே சொல்லி விட்டது

# தலை முடி கொட்டுவது நிற்க சில இயற்கை மருத்துவ குறிப்புகள்

முடி கொட்டிய இடத்தில் ஐஸ் கட்டியை தடவினால் முடி வளரும். கசகசாவை பாலில் ஊற வைத்து அரைத்து அத்துடன் பாசிப்பருப்பு மாவாக கலந்து தேய்த்து வர முடி உதிர்தல் நிற்கும் முடி நன்றாக வளரும்.

முடி நன்கு வளர சோற்றுக்கற்றாழை சாரில் தேங்காய் எண்ணெய் கலந்து தேய்த்தால் முடி உதிராது மேலும் முடி அடர்த்தியாக நன்றாக வளரும் அத்துடன் தலையும் குளிர்ச்சியாகும். சின்ன வெங்காயத்தின் சாறை எடுத்து தலையில் தேய்த்து ஊற வைத்து குளித்தால் முடி உதிராது நன்றாக வளரும். செம்பருத்தி பூவுடன் தேங்காய் எண்ணெய் கலந்து தலையில் தேய்த்தால் முடி உதிராது அத்துடன் கூந்தல் கருமையாகவும் மாறும் முடி நன்றாக வளரும். முட்டை வெள்ளை கருவை தலையில் தேய்த்து 10, நிமிடம் கழித்து சீயக்காய் போட்டு குளித்தால் தலைமுடி உதிர்வது சுத்தமாக நின்று விடும். வாரம் ஒருமுறை முடக்கத்தான் கீரையை அரைத்து தலையில் தேய்த்து 5, நிமிடம் ஊறியதும் குளிக்கவும் இதுபோல் தொடர்ந்து மூன்று மாத காலம் குளித்து பார்க்கவும் முடியை கொட்டுவது நின்றுவிடும் அது மட்டும் அல்ல இந்த கீரை தலைமுடி நரை விழுவதையும் தடுக்கும் கருகருவென முடி நன்றாக வளர தொடங்கும்.





# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி ஏற்ற தென்காசி மாவட்ட காவல்துறையினர்

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.V.R.ஸ்ரீனிவாசன் அவர்களின் தலைமையில் நடுவப்பட்டி சோதனை சாவடியில் பணியில் இருந்த காவல்துறையினர் இணைந்து இந்திய நாட்டின் ஒற்றுமையும், ஒருமை பாட்டையும், பாதுகாப்பையும் பேணுவதற்கு என்னையே உவந்தளிப்பேன் என்றும், இந்த நல்லியல்புகளை எனது நாட்டு மக்களிடையே பரப்புவதற்கு அயராது பாடுபடுவேன் என்றும் உளமாற உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

மேலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.பழனிக்குமார் அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் காவல் அதிகாரிகள், காவல் ஆளினர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் உறுதிமொழி எடுக்கப்பட்டது, இதைப்போல் மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி



செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 97894 91438



# வெளிநாடுகளில் சைபர் அடிமைகளாக சிக்கியுள்ள 1,000 தமிழர்கள்

**‘பகீர்’ தகவல்**

தென்கிழக்கு ஆசிய நாடுகள் உட்பட பல்வேறு வெளிநாடுகளில், கால் சென்டர் வேலை என அழைத்துச்சென்று, இளைஞர்களை ‘சைபர் குற்றங்களில்’ ஈடுபடுத்துவதாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இவ்வாறு சைபர் அடிமைகளாக இருப்பதாகவும் போலீசார் அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவில் கல்லூரி படிப்பு முடித்து வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்லும் இளைஞர்கள் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது. டிரைவர் வேலை, கடைகள், சூப் பர்மார்க்கெட் உள்ளிட்ட இடங்களில் மேற்பார் வையாளர்கள் வேலை என அழைத்துச்சென்று, அங்கு அடிமைகள் போல் வேலை வாங்குவது குறித்து பல செய்திகள் வெளியாகியுள்ளன. அதுபோல் சிக்கியவர்கள் அரசு முயற்சியில் மீட்டு வரப்பட்டுள்ளனர்.

தற்போது, தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப குற்றச்செயல்களிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சமீபகாலமாக சைபர் குற்றங்கள் அதிகரித்துள்ளன. தற்போது, ஒரு சில போலி ஏஜென்சியை சேர்ந்தவர்கள் கல்லூரி படிப்பை முடித்து வெளிவரும் மாணவர்கள், வேலை தேடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் உள்ளிட்டவர்களை குறிவைத்து வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக விளம்பரம் செய்கின்றனர்.

அவ்வாறு அவர்களை அணுகும் இளைஞர்களிடம் கால்சென்டர், டேட்டா என்ட்ரி வேலை எனக்கூறி ‘டூரிஸ்ட் விசாவில்’ கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ் உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், வேறு சில நாடுகளுக்கும் அழைத்துச் செல்கின்றனர்.

அங்கு சென்றவுடன், பாஸ்போர்ட்டை வாங்கிக்கொண்டு, அவர்களை கட்டாயப்படுத்தி, ஆன்லைன் முதலீடு உள்ளிட்ட பல்வேறு சைபர் குற்றச்செயல்களில் ஈடுபடுத்துகின்றனர். தமிழகம், ஆந்திரா, தெலுங்கானா, டெல்லி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 40,000 பேர் இப்படி சிக்கியுள்ளதாகவும், இதில், தமிழகத்தில் இருந்து மட்டும் 1,000க்கும் மேற்பட்டோர் சிக்கி இருப்பதாகவும் போலீசார் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர், ‘சைபர் ஸ்லேவரி’ எனப்படும் சைபர் குற்றங்களை செய்ய அடிமைகளாக வைக்கப்பட்டுள்ளனர். தமிழக போலீஸ் சைபர் கிரைம் பிரிவு கூடுதல் இயக்குனர் சந்தீப் மிட்டல், சைபர் அடிமைகள் குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளார். கோவை மாநகர போலீசார் சார்பில் கல்லூரிகளில் ‘சைபர் ஸ்லேவரி’ எனப்படும் சைபர் அடிமைகள் மற்றும் சைபர் குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. வெளிநாடுகளில் வேலை என ஏஜன்சிகளை மக்கள் அணுகும் முன், அந்த ஏஜன்சியின் செயல்பாடுகள் குறித்து இந்திய வெளியுறவுத் துறையின் emigrate.gov.in என்ற தளத்தில் தெரிந்து கொள்ள வேண்டும் என போலீசார் அறிவுறுத்தி உள்ளனர்.

தகவல்: நிருபர் R.குப்புசாமி,
கொடைக்கானல்



## மதுரை விளக்குத்தூண் பகுதியில் நகை, பணத்துடன் கிடந்த கைப்பை

# காவல்நிலையத்தில் ஒப்படைத்த தம்பதியினருக்கு காவல் ஆணையர் திரு.J.லோகநாதன் பாராட்டு

மதுரை மாவட்டம் அங்காடிமங்கலத்தை சேர்ந்த திருமதி.நிரோஷா என்பவர் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தாடை எடுப்பதற்காக விளக்குத்தூண் வந்தபோது 12 கிராம் தங்க நகை மற்றும் ரூ.20,000 பணத்துடன் கூடிய கைப்பையை தவறவிட்டார். அதனை அவ்வழியாக வந்த திரு.கோட்டைசாமி – திருமதி. பாண்டியம்மாள் தம்பதியினர் கண்டெடுத்து விளக்குத்தூண் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். காவல் உதவி ஆணையர் திரு.சூரக்குமார் அவர்கள் தலைமையில் விளக்குத்தூண் காவல் ஆய்வாளர் (குற்றம்) திரு.மகேஷ்குமார் அவர்கள் நகை மற்றும் பணத்தின் உரிமையாளரை கண்டு பிடித்து (29.10.2024) காவல் நிலையத்திற்கு வரவழைத்து அவர்களிடம் உரிய விசாராணை செய்த பின் நகை மற்றும் பணத்தை ஒப்படைத்தனர்.

மேலும் நேர்மையாக செயல்பட்ட திரு.கோட்டைசாமி – திருமதி. பாண்டியம்மாள் தம்பதியினரின் நற்செயலை மதுரை மாநகர காவல் ஆணையர் முனைவர் திரு.J. லோகநாதன் IPS அவர்கள் பாராட்டினர்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ்,மதுரை



**நீ யார் என தீர்மானிக்கும் பொறுப்பை**
**மற்றவரிடம் விட்டுவிடாதே..**
**அவர்கள் உன்னை மட்டம் தட்டுவார்கள்...**
**உன் தகுதியை**
**நீதான் தீர்மானிக்க வேண்டும்.**
**அதுதான் உன் வாழ்வில் வெற்றியை தரும்.**

– ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்



திண்டுக்கல் மாவட்ட காவல்துறை சார்பாக

# கல்லூரி மாணவர்களுக்கு சைபர்கிரைம் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.A.பிரதீப் IPS, அவர்கள் (28.10.2024) ரெட்டியார்சத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள PSNA பொறியியல் கல்லூரியில் மாணவ, மாணவிகளிடையே சைபர் கிரைம் குற்றங்கள் குறித்தும், அவற்றை கையாளும் முறைகள் குறித்தும், மேலும் சைபர் கிரைம் குற்றங்களுக்கு 1930 என்ற எண்ணை தொடர்பு கொள்ளும் படியும், இணையதளம் வழியாக புகார் செய்ய www.cybercrime.gov.in என்ற இணையதளத்தை பயன்படுத்தும் படி எடுத்துக் கூறி மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

நிருபர்: குருசரவணன், திண்டுக்கல்

---

# போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்வருக்கு 9 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.80,000/- அபராதம்

## திண்டுக்கல் மாவட்ட காவல்துறையினரின் சீரிய முயற்சி

29.10.2024 திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2020-ஆம் ஆண்டு 15 வயது சிறுமியை காதலித்து ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் வத்தலகுண்டு பெருமாள் கோவில் தெருவை சேர்ந்த சக்திவேல்(37) என்பவரை வத்தலகுண்டு காவல் நிலைய போலீசார் போக்சோ வழக்கில் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.A.பிரதீப் IPS அவர்களின் அறிவுறுத்தலின்படி வத்தலகுண்டு காவல் நிலைய ஆய்வாளர் திரு.சிலைமணி அவர்கள், நீதிமன்ற முதல் நிலை காவலர் திரு.சரவணகுமார் அவர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர் திருமதி.மைதிலி அவர்களின் சீரிய முயற்சியால் 29.10.2024 அன்று திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் குற்றவாளி சக்திவேல் என்பவருக்கு 9 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.80,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்கள். இந்தாண்டு இதுவரை 50 போக்சோ வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நிருபர்: குருசரவணன்,திண்டுக்கல்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்



# பப்பாளி பழத்தின் மருத்துவ குணங்கள்

பப்பாளி பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு வளர்ச்சிபெறும், பல் உறுதி ஏற்படும், இரத்த விருத்தி அடைந்து குழந்தைகள் நன்றாக வளர உதவும். பப்பாளி காயை கூட்டாக செய்து உண்டுவர குண்டான உடல் படிப்படியாக மெலியும். தொடர்ந்து பப்பாளி பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும்.

பப்பாளி பழத்தை தேனில் துவைத்து உண்டுவர நரம்பு தளர்ச்சி வராமல் தடுக்கும். நன்கு பழுத்த பப்பாளி பழத்தை கூழாக இசைத்து தேன் கலந்து முகத்தில் பூசி ஊறியபின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் நீங்கி முகம் பொலிவு பெறும் அழகு பெறும்.

பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட நாக்குப்பூச்சிகள் அழிந்து விடும், குடல் சுத்தமாகும். பப்பாளி காயின் பாலை வாய்ப்புண்கள் மேல் தடவினால் புண்கள் ஆறி குணமாகும். பப்பாளி பாலை பசும்பாலுடன் கலந்து கால்சேற்று புண்கள் இருக்கும் இடத்தில் தடவி வர சேற்றுபுண் ஆறி குணமாகும்.

பப்பாளி பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் தடவினால் புண்கள் ஆறி குணமாகும். பப்பாளி இலைகளை அரைத்து கட்டி மேல் போட்டு வர கட்டி உடைந்து ஆறி குணம் ஆகும். பப்பாளி இலைகளை பிழிந்து எடுத்து வீக்கங்கள் ஏற்படும் இடத்தில் மேல் பூசி வர வீக்கம் குறைந்து குணமாகும்.

பப்பாளி விதைகளை அரைத்து தேள் கொட்டிய இடத்தில் பூச தேள் கொட்டிய இடத்தில் வலி விஷம் இறங்கும். பப்பாளி காய் குழம்பை பிரசவித்த பெண்கள் உணவில் கலந்து உண்டு வர பால் சுரப்பு கூடும். பப்பாளி இலையை கல் உப்பு போட்டுதண்ணியில் நன்றாக கொதிக்க வைத்து அந்த கொதிக்க வைத்த ஆவியை வாய் வழியாக முகர்ந்து அந்த சுடுதண்ணியால் வாயை கொப்பளித்து வந்தால் ஈர் வீக்கம் பல் வலி நீங்கி பல்லில் ஏற்படும் பூச்சிகள் விழுந்து பல் வலி குணமாகும்.



*அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை*
*நாடி இனிய சொலின்.*

*குறள் 96: இனியவை கூறல்*

*பிறர்க்கு நன்மை தரும் இனிய சொற்களை மனத்தால் எண்ணிச் சொன்னால், அவனுள்ளும், நாட்டிலும் அறம் வளரும்; பாவங்கள் குறையும்.*

ஓம் காளி ஓம் நமசிவாய




## கருடசித்தர்

**Dr.பாலகிருஷ்ண சுவாமி**

எரசை, தேனி மாவட்டம்.






# அக்னி குள்ளர்கள் என்னும் கொல்லிவாய் பிசாசுகள்

ஆதி காலத்தில் இருந்தே தெய்வ சக்திகளும் தீய சக்திகளும் பூமியில் இருந்துள்ளது. நல்ல கர்மங்கள் செய்த ஆன்மாக்கள் ஈசனிடம் ஆசிர்வாதம் பெற்று தெய்வ சக்தியாக மாறி, பூமியில் மனிதர்களுக்கு நன்மை செய்வார்கள். அது போல், சில ஆன்மாக்கள் தீய கர்மங்கள் செய்து மனிதனுக்கு தொந்தரவுகள் செய்து சிவசாபத்தால் தீய சக்திகளாக மாறி பூமியில் உலாவும். அந்த வகையில் சிவ சாபம் வாங்கி பூமியில் தீய சக்திகளாகமாறி பூமியில் அலையும். அதுபோல், சிவசாபம் வாங்கி பூமியில் கொல்லிவாய் பிசாசுகளாக அலையும் அக்னி குள்ளர்களை பற்றி பார்ப்போம்...

**குள்ளர்கள் வரலாறு**

ஆதி காலத்தில் பல பல உலகங்களில் இருந்து பல விதமான வினோத சக்தி படைத்தவர்கள் பூமிக்கு வந்தனர். பூத உலகத்தில் இருந்து பூதங்களும், அரக்க உலகத்தில் இருந்து அரக்கர்களும் ராட்சச உலகத்தில் இருந்து ராட்சரர்களும் பூமிக்கு வந்தனர்.

பழைய யுகங்களில் இந்திர லோகத்தில் இருந்தும் கந்தர்வ உலகத்தில் இருந்து கந்தர்வர்களும் இன்னும் பல வினோதமான மனிதர்கள் ஆதிகாலத்தில் பூமியில் இறங்கி மனிதனுக்கு தீமைகளையும் செய்தனர்.

அதுபோல, குள்ளர் உலகத்தில் இருந்து மாயக் குள்ளர்கள் பூமியில் இறங்கினார்கள். அவர்கள் ஒரு சாண் அளவிலே இருந்தார்கள். மனித ஆற்றலைவிட பல மடங்கு அதிக ஆற்றல் உடையவர்கள். இவர்களை இப்போது சருகு மனிதர்கள் என்று அழைப்பார்கள்.

இவர்கள் பூமியில் இறங்கி நீர் நிறைந்த அருவிகள் ஓடும் இடத்தில் வாழத் தொடங்கினார்கள். இவர்கள் குளிர்ந்த இடத்திலேயே வாழ முடியும். நீரில் மீன்போல உள்ளேயே நீந்துவார்கள். இவர்களை நீர் மனிதர்கள் என்பார்கள். பூமியில் இறங்கி வந்த இந்த மாயக் குள்ளர்கள் இனம் நான்கு பிரிவுகளாக பிரிந்து வாழத் தொடங்கினார்கள்.

**மாயக் குள்ளர்களின் 4 வகைகள்**

1. அக்னி குள்ளர்கள், 2. சருகு குள்ளர்கள் (சருகு மனிதர்கள்), 3. நீர்க்குள்ளர்கள் 4. மாயன் குள்ளர்கள் என்னும் குட்டிச்சாத்தான்கள்.

**1. சருகு குள்ளர்கள் என்ற சருகு மனிதர்கள்**

சருகு குள்ளர்கள் என்னும் சருகு மனிதர்கள் நீரோடை நிறைந்த இடங்களில் வாழத் தொடங்கினார்கள். சிவன் பூசை செய்பவர்கள். வன தேவதைகள் ஆசிர்வாதத்தோடு காடுகளில் நன்மைகளை செய்பவர்கள்.

வனங்களை பாதுகாக்க வன தேவதைகளிடமும் சிவனிடமும் வேண்டிக் கொள்வார்கள். இவர்கள் கையில் சஞ்சீவி மூலிகையை வைத்துக் கொள்வார்கள். தங்களை தற்காத்துக் கொள்ள மறையும் சக்தி கொண்டவர்கள். சிறு சிறு இடுக்கு பாறை பொந்துகளில் சிவ பூசை செய்பவர்கள். இவர்கள் அனைத்து உயிர்களின் நன்மைக்காக தவம் செய்பவர்கள்.

**2. நீர் குள்ளர்கள் என்ற நீர் மனிதர்கள்**

மாயக் குள்ளர்கள் இனம் காலப் போக்கில் தனித்தனியாக பிரிந்து வாழத் தொடங்கியது. அதில் ஒரு பிரிவு நீரில் வாழ ஆரம்பித்தது. இவர்கள் வனங்களில் உள்ள நீர் குழிகளிலும் ஓடும் ஆறுகளிலும் காலப் போக்கில் வாழத் தொடங்கினார்கள். சிலர் கடலிலும்

வாழத் தொடங்கினார்கள். இவர்களை நீர் மனிதன் என்று அழைப்பார்கள். பழைய காலத்தில் உள்ளவர்கள் இந்த நீர் மனிதர்களை பார்த்திருப்பார்கள்.

இந்த நீர் மனிதர்கள் மநிதர்கள் கையில் சிக்கிவிட்டால் கண்களில் இருந்து நீர் தாரை தாரையாக வடியும். கண்ணீர் விட்டு அழுவார்கள். மிகவும் எளிமையான ஜீவன்கள். இவர்கள் லட்சுமியையும், சோழியம்மனையும் வணங்குபவர்கள். சோழியம்மன் என்பது கடல் மாதாவை குறிக்கும்.

நீர் மனிதர்களை நினைத்து நாம் நீரோடை அருகில் பூசை செய்யும் போது லட்சுமியின் அருளும் சோழியம்மன் அருளும் கிடைக்கும். சோழியம்மன் அனைத்து நத்தை, நண்டு போன்ற ஓடு உள்ள கடல்வாழ் உயிரினங்களுக்கும் சோழியம்மன் தாயாக காக்கும். மீன் இனத்துக்கு முழுவதும் கடல் கன்னிகளும் மச்ச கன்னிகளும் பாதுகாக்கும். நீர் மனிதர்கள் இரக்க குணங்களும் தெய்வ குணங்களும் கொண்டவர்கள்.

**3. மாயன் குள்ளர்கள் என்னும் குட்டி சாத்தான்கள்**

மாயக் குள்ளர்கள் இனத்தை சேர்ந்ததே குட்டி சாத்தான்கள். இந்த குள்ளர்கள் திருமாலை வழிபடக் கூடியவர்கள். விஷ்ணு என்னும் பெருமாளை வழிபடக் கூடியவர்கள். மாயனாகிய பெருமாளை வழிபடுவதால் மாயன் குள்ளர்கள் என அழைக்கப்படடார்கள்.

இவர்களும் சருகு குள்ளர்களும் சேர்ந்தே வாழ்ந்தனர். பெருமாளிடம் தவம் செய்து அவரிடம் இருந்து வரங்களை வாங்கினார்கள். நன்மைக்கு நனம்மையாகவும் தீமைக்கு தீமையாகவும் செயல்படுவார்கள். பெருமாளிடம் வரம் வாங்கி அதிக சக்திகளை பெற்றனர். பெருமாள் பக்தர்களுக்கு மறைமுகமாக உதவி செய்யும் தேவதைகளாக மாறினர். விஷ்ணுவின் ஆசிர்வாதத்தை பெற்றதால் விஷ்ணு மாயா என்றும் குட்டிச்சாத்தான் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

மலைகளில் வரும் பெருமாள் பக்தர்களுக்கு உணவு, இனிப்புகளை தந்து அவர்களுக்கு பசி நீக்குபவர்கள். தவ யோகிகள் இவர்களை வசியம் செய்து குட்டிச்சாத்தான்களாக மக்களுக்கு இதன் மூலம் பொருள்களை வரவழைத்து நன்மைகளை செய்தார்கள்.

காலப்போக்கில் சில தவறான மந்திரவாதிகள் இந்த குட்டிச்சாத்தான்களை பணத்துக்காக தவறான வழியில் பயன்படுத்துகின்றனர். ஏவுதலுக்கு பயன்படுத்தி மனிதர்களை துன்பப்படுத்துகின்றனர். இவ்வாறு செய்பவர்கள் இறுதி காலங்களில் துர்மரணத்தை அடைந்து அவர்கள் ஆன்மா நரக துன்பத்தை அடையும் என்பது சித்தர்கள் வாக்காகும்.

மாயன் குள்ளர்கள் பெருமாள் பக்தி உள்ளவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் மறைமுகமாக நன்மை செய்பவர்கள். பெருமாளின் அடிமையாக இருந்து சேவை செய்பவர்கள்.

**4. அக்னி குள்ளர்கள் (கொல்லிவாய் பிசாசுகள்)**

அக்னி குள்ளர்கள் என்னும் குள்ளர்கள் நீர் நிலையை விட்டு அடர்ந்த மரங்கள் நிறைந்த வனங்களில் குழுக்களாக பிரிந்துவாழ ஆரம்பித்தனர். இந்த அக்னி குள்ளர்கள் இனம் தீய உலகத்தில் இருந்து பூமிக்கு வந்த ஆன்மாக்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டனர்.

**தீய சக்திகளிடம் ஏமாந்தனர்**

இந்த அக்னி குள்ளர்கள் தீய சக்திகளின் சொல்லுக்கு மயங்கினர். அனைத்து சக்திகளையும் உங்களுக்கு தருகிறேன், அனைத்தையும் பெறலாம் என்ற தீய சக்திகளின் சொல்லுக்கு மயங்கினர். இந்த குள்ளர்கள் சிவனையும் பிரம்மனையும் காளியையும் வழிபட்டு வந்தவர்கள்.

தெய்வங்களை வழிபடும்போது இவர்கள் அனைத்து சுகத்தோடும் தெய்வ அம்சத்தோடும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். காலப் போக்கில் வேற்றுலக தீய சக்திகளோடு தொடர்பு கொண்டு தீய சக்திகளை வணங்க ஆரம்பித்தனர். நாளடைவில் சிவனையும் காளியையும் வெறுக்க ஆரம்பித்தனர். பழங்களை சாப்பிட்டு வந்த அக்னி குள்ளர்கள் பல்லிகளையும், ஓணான்களையும் பூச்சிகளையும் பறவைகளையும் பச்சோந்திகளையும் பிடித்து உணவாக உண்ண ஆரம்பித்தார்கள். அவர்களிடம் இருந்த சிவ அம்சம் நீங்கி கொடூர அம்சமாக மாறினார்கள். தீய சக்திகளிடம் பெற்ற தீய சக்திகளை பயன்படுத்தி தீமை செய்ய ஆரம்பித்தார்கள்.

**சிவனிடம் சாபத்தை வாங்குதல்**

வனத்தில் வாமும் மிருகங்களையும் பறவைகளையும் துன்பப்படுத்த ஆரம்பித்தார்கள். அவர்களிடம் கொலை வெறி ஆரம்பித்தது. தாங்கள் வணங்கிய சிவ லிங்கத்தையும், சிவ பொருட்களையும் உடைத்து ஆற்றில் வீசினார்கள். உயிர்களின் இரத்தத்தை உணவாக்கினார்கள். அதுமட்டுமில்லாமல் தங்கள் இனமான சருகு குள்ளர்களையும் நீர்க் குள்ளர்களையும் துன்பப்படுத்த ஆரம்பித்தார்கள். சருகு குள்ளர்களுக்கு உதவியாக மாயன் குள்ளர்கள் வந்து அந்த அக்னி குள்ளர்களை விரட்டினர். காட்டிலேயே தவம் புரியும் தவ யோகிகளையும் சிவ யோகிகளையும் துன்பப்படுத்தினர்.

இந்த கொடுமைகளால் வனத்திலும் நாட்டிலும் உள்ள மக்களுக்கும் துன்பம் நேர ஆரம்பித்தது. சருகு குள்ளர்களும் நீர் குள்ளர்களும் சிவனிடம் வேண்டினார்கள். சிவனை நினைத்து இரவு முழுவதும் பூசை செய்தார்கள்.

**அக்னி குள்ளர்களாக மாறுதல்**

சருகு குள்ளர்களையும் நீர் குள்ளர்களையும் அழிக்க அவர்கள் இருக்கும் இடத்துக்கு அக்னி குள்ளர்கள் வந்து சேரந்தனர். கண்ணில் பட்ட அனைத்து சருகு குள்ளர்களையும் சித்ரவதை செய்தனர். சிவனிடம் அனைவரும் அபயக் குரல் எழுப்பினர். சிவபெருமான் சிவ லிங்கத்தில் இருந்து நெருப்பாக வெளிப்பட்டார். அந்த துன்பம் செய்யும் குள்ளர்களை எரித்தார். அவர்கள் பாதி எரிந்தும் எரியாமலும் தீப்பந்து போல் தப்பி ஓடினர். இனி

உங்கள் உருவம் அழிந்து அக்னி பந்துகளாக மாறி கொல்லிவாய் பிசாசுகளாக ஓடி ஒளிந்து வாழ்வீர்கள். அக்னி பந்துகள் உங்களை சூழ்ந்து செத்தும் சாகாமல் சித்ரவதையில் சூடுபட்டுக் கொண்டே வாழ்வீர்கள் என்று சபித்தார். இது சிவன் கொடுக்கும் நெருப்பு தண்டனையாகும்.

சிவனடியார்களையும் தெய்வ பக்தி உள்ளர்களையும் நீ நெருங்க முடியாது என்று ஆணையிட்டார். அனைத்து வேற்றுலக தீய சக்திகளும் ஓடி ஒளிந்தன. இந்த தீய மாயக் குள்ளர்கள் அக்னி பந்துகளாக மாறி கொல்லிவாய் பிசாசுகளாக குகைகளில் மறைந்து கொண்டனர். நீங்கள் உருவம் எடுத்தால் அக்னி பந்துகளாக உங்கள் உருவம் வரும். அந்த சூடு வேதனையை நீங்கள் அனுபவிப்பீர்கள் ென்று சிவபெருமான் கூறினார். கலிகாலம் முடியும் வரை உங்கள் சாபம் இருக்கும் என்றார்.

**கொல்லிவாய் பிசாசுகள் (அக்னி குள்ளர்கள்)**

இரவு நேரங்களில் நாம் தனியாக செல்லும்போது நடுநிசியில் நெருப்பு போல் உருவம் தெரியும். இதுவே கொல்லிவாய் பிசாசு. இது உடனே மறைந்துவிடும். இன்னும் பல மக்கள் இரவில் இந்த தீப்பிடிக்கும் நெருப்பு உருவத்தை பார்த்திருக்கின்றனர். மழைக்காலங்களில் மின்னல்களில் இறங்கி மனிதர்களையும் மிருகங்களையும் அழிப்பர். வனத்தில் தீப்பிடிக்கும் சூழ்நிலைகளை உருவாக்கி வனத்தில் தீயை எரியச் செய்வது இவர்களின் வேலை.

மனிதர்கள் மேல் இறங்கி அவர்களை வனக்காடுகளில் தீ வைக்க தூண்டுவதே இதன் வேலைதான். இந்த கொல்லிவாய் பிசாசுகள் வனங்கள் தீப்பிடித்து எரிவதை அதிகம் விரும்பும். ஏனென்றால் வனத்தில் உள்ள விலங்குகளும் பறவைகளும் மரங்களும் செடிகளும் அழிந்துவிடும். இவைகள் அழிவதை இவர்கள் விரும்புவர்.

இரவு நேரங்களில் மனித உருவில் நெருப்புபோல் உருவம் தெரிந்து மனிதர்களை பயமுறுத்தும். கலியுகத்தில் மனிதர்களை அழிக்க அக்னி குள்ளர்கள் சூட்சமமாக செயல்படுவார்கள்.

தெய்வ வழியில் முழு பக்தியோடு இவர்கள் நம்மிடம் நெருங்கவிடாமல் செய்யலாம்.

கலியுகத்தின் அழிவில் பல வேற்றுலக தீய சக்திகளோடு இவர்கள் கூட்டாக செயல்படுவர். தெய்வ பக்தியே மனித இனத்தையும் மனித ஆன்மாவையும் காக்கும்.

சருகு குள்ளர்களை நினைத்து நாம் பூசை செய்யும் போது நமக்கு உருவத்தைக் காண்பித்து நமக்கு ஆசிர்வாதம் செய்து மறைவார்கள். கலியுகத்தில் நல் அறங்களை செய்து எளிய சிறு சிறு உயிர்களின் பசியை நீக்கி தெய்வ பக்தியோடு வாழ்வோம். தெய்வ பக்தியே கலியுகத்தில்நம்மை காக்கும் சக்தியாகும்.



# குடமுழா

அழிந்து போன தமிழர்களின் இசைக் கருவி. இந்த குடமுழுவம் இசைக் கருவி தேவாரத்தில் ‘‘குடமுழா’’ என்று குறிப்பிடப்பட்டிருப்பதில் இருந்து, ஒரு காலத்தில் சோழ மண்டலத்தில் பெருவாரியாக இந்த அரிய இசைக் கருவி பாவனையில் இசைக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது.

தேவாரத்திற்கு முந்திய சிலப்பதிகாரத்திலும் இந்த ‘‘கடமுழுவம்’’ இசைக்கருவி இசைக்கப்பட்டிருக்கிறது... இந்த இசைக் கருவி தற்போது ஈழம் மற்றும் தமிழத்தில் ஒருசில இடங்களில் மட்டுமே எஞ்சியுள்ளது. திருவாரூர் தியாகராசர் மற்றும் திருத்துறைப்பூண்டி மருந்தீசுவரர் கோயில்களில் மட்டுமே இந்த அரிய இசைக்கருவியான குடமுழாவை காண முடியம். வார்ப்பு வெண்கலத்தில் உருவாக்கப்பட்ட உயரமான குடத்தில் ஐந்து வாய்கள் இருக்கும். வாய்கள் அனைத்தும் மான் தோல்களால் மூடப்பட்டிருக்கும். ஒவ்வொரு வாயிலிலும் வெவ்வேறு விதமான பண்(இசை) எழுப்பப்படும். சங்க இலக்கியங்கள் குடமுழுவத்தை பற்றி ஏராளமான பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. மேலும், போர் வீரர்களின் தோள் வலிமைக்கும், பலாப்பழத்திற்கும், பனைமரத்தின் அடிக்கும் இக்கருவியை ஒப்பிட்டு பல சங்ககால பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன.



# நவம்பர் மாத அதிர்ஷ்டம் யார் கையில் தெரியுமா?



அக்டோபர் மாதத்திலேயே குரு வக்ர நிவர்த்தி நடந்துள்ளதோடு, சுக்கிரனின் மாற்றம், புதனுடன் சேர்க்கை நடந்துள்ளதோடு, நவம்பரில் சுக்கிரனின் பெயர்ச்சி, சனி வக்ர நிவர்த்தி, சூரியனின் பெயர்ச்சி காரணமாக ரிஷபம், கடகம் சில இராசிகளை சேர்ந்தவர்களுக்கு அதிர்ஷ்டம் நிறைந்ததாக இருக்கும்.

நவம்பர் மாதத்தில் கிரகங்களின் பெயர்ச்சி, கிரக சேர்க்கை உள்ளிட்ட காரணங்களால் சில ராசிகளுக்கு மிகவும் சாதகமானதாக அமையும். குருவும் – சுக்கிரனும் எதிர் எதிராக அமைய உள்ளனர். மேலும் இந்த மாதத்தில் சனி வக்ர நிவர்த்தி அடைகிறார். இதன் மூலம் ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கும்பம் உள்ளிட்ட ராசிக்காரர்களுக்கு கிரகங்களின் அமைப்பானது பல விதத்தில் சுப பலன்களைத் தரக்கூடியதாக அமையும். அவர்களின் தொழிலில் பெரிய வெற்றியும் அதிர்ஷ்டமும் பெறலாம்.

**ரிஷப ராசிபலன்:**

ரிஷப ராசியை சேர்ந்தவர்களுக்கு இந்த நவம்பர் மாதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் உறவு விஷயத்தில் சிறப்பான புரிதல் மற்றும் ஒத்துழைப்பு வாழ்க்கைக்கு உதவும். வேலை தேடுபவர்களுக்கு தங்களின் தகுதிதேற்ப நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். உங்களின் எதிர்காலம் தொடர்பான முதலீடு, முயற்சிகளில் சிறப்பான பலனைத் தரக்கூடும்.

உத்தியோகஸ்தர்கள் பணியிடத்தில் சக ஊழியர்களுடன் சிறப்பான ஒருங்கிணைப்பைப் பெறலாம். காதல் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்து இருக்கும். திருமண உறவில் மகிழ்ச்சியும், இணக்கமான சூழலும் இருக்கும். உறவுகளின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுன ராசி பலன்**

மிதுன ராசி சேர்ந்தவர்களுக்கு நவம்பர் மாதத்தில் எல்லா வேலைகளிலும் கூடுதல் கவனம் தேவை. அலட்சியமாக செய்யக்கூடிய வேலையால் தேவையற்ற அவப்பெயர் ஏற்படும். மாத தொடக்கத்தில் உங்கள் பணத்தைப் புத்திசாலித்தனமாகச் செலவிடவும். இல்லையெனில் தேவையற்ற நிதிச் சுமையைச் சந்திக்க வாய்ப்புள்ளது. உங்களால் நிறைவேற்றக்கூடிய விஷயங்களை மட்டும் செய்யவும். பிறருக்கு வாக்குறுதிகளைக் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

**கடக ராசி பலன்கள்**

கடக ராசியை சேர்ந்தவர்களுக்கு நவம்பர் மாதத்தில் பல சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்களின் எண்ணங்கள் வெற்றி அடைய வாய்ப்புகள். எல்லா இடங்களிலும் நேர்மறையான விஷயங்கள் நடக்கும். நீங்கள் செய்யும் தொழில், வியாபாரம் தொடர்பாக முயற்சியில் வெற்றியும் புதிய வாய்ப்புகளும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வெற்றி வாய்ப்புகள் கிடைக்கும். பணியிடத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்த முடியும். மாணவர்கள் படிப்பில் சிறப்பாக செயல்படுவார்கள். புதிய நபர்களின் தொடர்பு உங்களுக்கு உதவும்.

**சிம்ம ராசி பலன்கள்**

சிம்ம ராசிக்காரர்களுக்கு நவம்பர் மாதத்தில் குடும்பம் மற்றும் வேலை தொடர்பான விஷயத்தில் வாழ்க்கையில் அதிக கவனம் செலுத்தவும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்னைகள் தீர வாய்ப்புள்ளது. புதிய வேலை தேடும் முயற்சிகள் சற்று பொறுமையுடன் இருக்க வேண்டியது நல்லது. பணியிடத்தில் கவனத்துடன் செயல்பட வெற்றியும், லாபத்திற்கான வாய்ப்புகளும் கிடைக்கும். மாணவர்கள் கல்வித் துறையில் வெற்றி கிடைக்கும். கட்டிடத்துறை, கலைத்துறையில் முன்னேற்றம் இருக்கும். குடும்ப உறவில் வலுவடையும். பெற்றோருடன் மன கசப்பு தீரும்.

**மகர ராசிபலன்கள்**

இந்த மாதத்தில் நன்மை அதிகம் நடக்கும். சமூகத்தில் உங்கள் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். சமூக பணிகளில் கவனம் செலுத்துவீர்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் மகிழ்ச்சியான சூழல் இருக்கும். உங்கள் அபிலாஷைகள் நிறைவேறும். வேலை தொடப்ராக உங்களின் முழு ஆற்றலுடன் செயல்படுவீர்கள். உழைக்கும் வர்க்கத்தினருக்கு லாபம் அதிகரிக்கும். குழுவாக செய்யக்கூடிய வேலையில் சிறப்பான வெற்றி பெறலாம். தலைமைத்துவ திறன்கள் அதிகரிக்கும். நிதி விஷயங்களில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். இந்த மாதத்தில் முதலீடுகள் மூலம் நல்ல நன்மைகள் பெறலாம். துணையின் உறவில் பரஸ்பர புரிதலும், நல்லிணக்கமும் கிடைக்கும்.

**கும்ப ராசி பலன்கள்**

கும்ப ராசிக்காரர்களுக்கு உங்கள் செயலில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும் காலம். சமூத்தில் நற்பெயரும், அந்தஸ்தும் உயரும். கடிய உழைப்பு, அர்ப்பணிப்பான பாராட்டு கிடைக்கும். உங்களின் வேலை மற்றும் பொறுப்புகளில் ஆர்வத்துடனும், சுறுசுறுப்பாகவும் செய்து முடிப்பீர்கள்.

செல்வாக்கு மிக்கவர்களின் ஆதரவு கிடைக்கும். வேலை தேடும் நபர்களுக்கு நேரம் சாதகமாக இருக்கும். செல்வாக்கு மிக்க நபர்களின் ஆதரவு கிடைகும். வீடு, மனை வாங்குதல் போன்ற முதலீடு விஷயத்தில் சாதகமான காலமாக இருக்கும். புதிய வருமான வாய்ப்புகள் உண்டாகும். சுப காரியங்கள் விஷயத்தில் உறவுகளின் ஆதரவு கிடைக்கும்.

மேஷம்

## மேஷ ராசி அன்பர்களே...

இந்த மாதம் நல்ல யோகமான பலன்களைப் பெற போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்க கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். நயமாக பேசுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. வேலை பார்க்கும் இடத்தில் பொருள்களை கவனமாக பாதுகாப்பாக வைப்பது நல்லது. பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம். மாணவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். பாடங்களில் கவனம் செலுத்துவது குறைய கூடும். நன்கு படிப்பது நல்லது. வெளிநாடு சம்பந்தமான படிப்புகளுக்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

**வழிபடவேண்டிய தெய்வம்: அம்பாள்**

**ஸ்லோகம்: லலிதா சகஸ்ரநாமம்**

**பரிகாரம் : வெள்ளிக்கிழமையில் நவக்கிரகத்தில் சுக்கிரனுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**சந்திராஷ்டமம்: (1)ஐப்பசி 16ம் தேதி 02/11/2024 இரவு மணி 11.53 முதல் 19ம் தேதி 5/11/2024 காலை 9.06 மணி வரை (2) கார்த்திகை 15ம் தேதி 30/11/2024 காலை 4.39 மணி முதல் 17ம் தேதி 2/12/2024 மாலை 4.38 மணி வரை.**

ரிஷபம்

## ரிஷப ராசி அன்பர்களே...

ரிஷப இராசிக்காரர்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் சிறப்பான நேரத்தை செலவிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஸ்திரத்தன்மை இருக்கும். இருப்பினும், நிதி விஷயங்களில் கவனமாக இருக்கவும். பழைய முதலீடுகளில் லாபம் கூடும். உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுங்கள், குறிப்பாக உங்கள் உணவில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். சனி பகவானின் ஷஷ யோகம் அதிக நன்மைகளை அளிக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: முருகனை வணங்கி வழிபடுங்கள்**

**ஸ்லோகம்: கந்தஷஷ்டி கவசம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : செவ்வாய் கிழமைகளில் நவக்கிரகத்தில் செவ்வாய்க்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**சந்திராஷ்டமம்: (1) ஐப்பசி மாதம் 19ம் தேதி 5/11/2024 செவ்வாய்க்கிழமை காலை 9.07 மணி முதல் ஐப்பசி மாதம் 21ம் தேதி 07/11/2024 வியாழக்கிழமை மாலை மணி 3.49 வரை**

**(2) கார்த்திகை மாதம் 17ம் தேதி 2/12/2024 திங்கள்கிழமை மாலை 4.39 மணி முதல் கார்த்திகை மாதம் 19ம் தேதி 4/12/2024 புதன்கிழமை இரவு 11.40 மணி வரை.**

மிதுனம்

## மிதுன ராசி அன்பர்களே...

இந்த மாதம் புதிய வாய்ப்புகளுக்கான கதவுகள் திறக்கும். உங்கள் யோசனைகள் மற்றும் படைப்பாற்றல் பாராட்டப்படும். புதிய திட்டத்தில் முதலீடு செய்ய உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

எனினும், எந்த வித முயற்சியை எடுக்கும் முன்னரும் சற்று நிதானமாக யோசித்து முடிவெடுப்பது நல்லது. காதல் மற்றும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிம்மதியும் இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்:**

**நவக்கிரகத்தில் இருக்கும் புதன் பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: கந்தகுரு கவசம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : நவக்கிரகத்திலுள்ள புதபகவானுக்கு, புதன்கிழமையில் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**சந்திராஷ்டமம்: ஐப்பசி மாதம் 21-ம் தேதி 07/11/2024 வியாழக்ககிழமை மாலை 3.50 மணி முதல் ஐப்பசி மாதம் 23ம் தேதி 09/11/2024 சனிக்கிழமை இரவு 8.22 மணி வரை**

கடகம்

## கடக ராசி அன்பர்களே...

கடக ராசிக்காரர்கள் உணர்ச்சிவசப்படும்படியான சூழல் அமையலாம். குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் முழுமையான ஆதரவு கிடைக்கும். பணியிடத்தில் சவால்கள் இருக்கலாம், ஆனால் பொறுமையுடனும் கடின உழைப்புடனும் அனைத்தையும் கையாண்டு வெற்றி பெறுவீர்கள்.

நிதி நிலை நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் சுக்கிர பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: கந்தர் அனுபுதி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : வெள்ளிக் கிழமைகளில் நவக்கிரகத்தில் சுக்கிரனுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**சந்திராஷ்டமம்: ஐப்பசி மாதம் 23ம் தேதி 09/11/2024 சனிக் கிழமை இரவு 8.23 மணி முதல் ஐப்பசி மாதம் 25ம் தேதி 11/11/2024 திங்கள் கிழமை இரவு 11.26 மணி வரை**




## சிம்ம ராசி அன்பர்களே...

சிம்ம ராசிக்காரர்களுக்கு முன்னேற்றங்கள் நிறைந்த மாதமாக இருக்கும். உத்தியோகத்தில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. உங்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கக்கூடும். கடின உழைப்புக்கான பாராட்டு கிடைக்கும். குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவது மன அமைதியை தரும். நிதி நிலைமை மேம்படும். இருப்பினும் செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் சூரிய பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: ஆதித்ய கிருதயம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : ஞாயிற்றுக் கிழமைகளில் நவக்கிரகத்தில் சூரியனுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**இராசி சந்திராஷ்ட்டம தினம்: ஐப்பசி மாதம் 25ம் தேதி 11/11/2024 திங்கள்கிழமை இரவு 11.27 மணி முதல் ஐப்பசி மாதம் 27ம் தேதி 13/11/2024 புதன் கிழமை காலை 1.47 மணி வரை.**




## கன்னி ராசி அன்பர்களே...

கன்னி ராசிக்காரர்களுக்கு சமநிலையான மாதமாக இருக்கும். உங்கள் வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் சமநிலை பராமரிக்கப்படும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகளைப் பெறுவீர்கள். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கும். குழந்தைகள் மூலம் நல்ல செய்திகள் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் சந்திர பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: சந்திரன் காயத்ரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : திங்கள் கிழமைகளில் நவக்கிரகத்தில் சந்திரனுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**சந்திராஷ்ட்டமம்: ஐப்பசி மாதம் 27ம் தேதி 13/11/2024 புதன் கிழமை காலை 1.48 மணி முதல் கார்த்திகை மாதம் 1ம் தேதி 16/11/2024 சனிக்கிழமை அதிகாலை 4.23 மணி வரை**




## துலா ராசி அன்பர்களே...

துலாம் ராசிக்காரர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ள இந்த மாதம் வாய்ப்பு கிடைக்கும். தொழில் வாழ்க்கையில் சில முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கும். பண விஷயங்களில் கவனமாக இருக்கவும், புதிய முதலீடுகளை தவிர்க்கவும். குடும்பத்தினருடன் சிறிது நேரம் செலவிடுவது நன்மை தரும். உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுங்கள், குறிப்பாக மன அழுத்தத்தைத் தவிர்க்கவும். சனி வக்ர நிவர்த்தியின் தாக்கத்தால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் குரு பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: குரு காயத்ரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : வியாழக்கிழமைகளில் நவக்கிரகத்தில் குருபகவானுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.**

**சந்திராஷ்ட்டம தினம் : கார்த்திகை மாதம் 1-ம் தேதி 16/11/2024 சனிக்கிழமை அதிகாலை 4.24 மணி முதல் கார்த்திகை மாதம் 3ம் தேதி 18/11/2024 திங்கள்கிழமை காலை 8.07 மணி வரை**




## விருச்சிக ராசி அன்பர்களே...

விருச்சிக ராசிக்காரர்களுக்கு தொழிலில் சாதகமான மாற்றங்கள் ஏற்படக்கூடும். சில புதிய திட்டங்களின் மூலம் உங்களை பிஸியாக வைத்துக்கொள்வீர்கள். உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பொருளாதார நிலை மேம்படும். இந்த மாதம் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் சனிஸ்வர பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: சனி காயத்ரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : சனிக் கிழமைகளில் நவக்கிரகத்தில் சனிஸ் வர பகவானுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.**

**சந்திராஷ்ட்டமம் : கார்த்திகை மாதம் 3ம் தேதி 18/11/2024 திங்கள்கிழமை காலை 8.07 மணி முதல் கார்த்திகை மாதம் 5ம் தேதி 20/11/2024 புதன்கிழமை பகல் 1.47 மணி வரை.**




## தனுசு ராசி அன்பர்களே...

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் புதிய தொடக்கத்திற்கான அறிகுறிகள் உள்ளன.

பயண வாய்ப்புகள் உள்ளன. பொருளாதார நிலை நன்றாக இருக்கும். உங்கள் தொழிலில் உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்புகள் கிடைக்கும். இந்த மாதம் நிதி நிலை மேம்படும். தேவையற்ற செலவுகளை தவிர்ப்பது நல்லது.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் கேது பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: கேது காயத்ரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : வியாழக் கிழமைகளில் நவக்கிரகத்தில் கேது பகவானுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.**

**சந்திராஷ்ட்டமம்: கார்த்திகை மாதம் 5ம் தேதி 20/11/2024 புதன்கிழமை பகல் 1.48 மணி முதல் கார்த்திகை மாதம் 7ம் தேதி 22/11/2024 வெள்ளிகிழமை இரவு 9.52 மணி வரை**




## மகர ராசி அன்பர்களே...

மகர ராசிக்கு சுயபரிசோதனை செய்யும் மாதமாக இருக்கும். உங்கள் வாழ்க்கையில் சில பெரிய முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். பணியிடத்தில் சவால்கள் இருக்கும். ஆனால் அவற்றை உங்கள் அனுபவத்தால் வெற்றியுடன் கையாளுவீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். இந்த நேரம் நிதி ரீதியாக சாதகமாக இருக்கும். உடல்நிலை சீராக இருக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் ராகு பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: ராகு காயத்ரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : வெள்ளிக் கிழமைகளில் நவக்கிரகத்தில் ராகு பகவானுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.**

**சந்திராஷ்ட்டமம் : கார்த்திகை மாதம் 7ம் தேதி 22/11/2024 வெள்ளிகிழமை இரவு 9.53 மணி முதல் கார்த்திகை மாதம் 10ம் தேதி 25/11/2024 திங்கள்கிழமை காலை 8.14 மணி வரை.**




## கும்ப ராசி அன்பர்களே...

கும்ப ராசிக்காரர்களுக்கு தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையில் சில ஏற்ற தாழ்வுகள் இருக்கலாம். புதிய திட்டங்களில் வெற்றி கிடைக்கும். ஆனால் பழைய விஷயங்களில் கவனம் தேவை. பண விஷயங்களில் புத்திசாலித்தனமாக முடிவுகளை எடுங்கள். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் முழுமையான ஆதரவு கிடைக்கும். சில உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சனி பகவானின் வக்ர நிவர்த்தி பல நன்மைகளை அளிக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் சனிஸ்வர பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: சனி காயத்ரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : சனிக் கிழமைகளில் நவக்கிரகத்தில் சினிஸ்வர பகவானுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**சந்திராஷ்ட்டம தினம்: கார்த்திகை மாதம் 10ம் தேதி 25/11/2024 திங்கள்கிழமை காலை 8.15 மணி முதல் கார்த்திகை மாதம் 12ம் தேதி 27/11/2024 புதன்கிழமை இரவு 5.36 மணி வரை**




## மீன ராசி அன்பர்களே...

மீன ராசி காரர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். பண வரவு அதிகமாக இருக்கும். எனினும் சேமிப்பில் கவனம் தேவை. குடும்ப வாழ்க்கையில் அன்பும் ஒத்துழைப்பும் நிலைத்திருக்கும். உங்கள் ஆரோக்கியத்தை கவனித்து, தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள். குழந்தைகள் மூலம் நல்ல செய்தி கிடைக்கும்.

**வணங்கி வழிபடவேண்டிய தெய்வம்: நவக்கிரகத்தில் இருக்கும் ராகு, கேது பகவானை வணங்கி வழி படுங்கள்**

**ஸ்லோகம்: ராகு ,கேது காயத்ரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது**

**பரிகாரம் : செவ்வாய்க்கிழமைகளில் நவக்கிரகத்தில் ராகுவுக்கும் கேதுவுக்கும் பகவானுக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும் .**

**சந்திராஷ்ட்டமம் : கார்த்திகை மாதம் 12ம் தேதி 27/11/2024 புதன்கிழமை இரவு 7.55 மணி முதல் கார்த்திகை மாதம் 15ம் தேதி 30/11/2024 சனிகிழமை காலை 7.11 மணி வரை.**








### போலீஸ் பார்வைமாத இதழ் குழுமம், மகாத்மா கண் மருத்துவமனை, திருச்சி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்திய

# இலவச கண் சிகிச்சை முகாமில் 200-க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்

## சிறப்பு பயன் தந்த டாக்டர்.நந்தகுமாரின் பாரம்பரிய தொடுவைத்திய முறை

போலீஸ் பார்வைமாத இதழ் குழுமம், மகாத்மா கண் மருத்துவமனை, திருச்சி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை (கண்புரை அறுவை சிகிச்சை) முகாம் மற்றும் பாரம்பரிய தொடுவைத்திய முறைப்படி மனித உடலில் உள்ள உடல் உறுப்புகள் குறைபாடுகளை பாரம்பரிய வைத்திய முறைப்படி நாடிபிடித்து உள்ளதை உள்ளபடியாக தத்ரூபமாக சொல்லக்கூடிய Dr.நந்தகுமார் அவர்களின் பாரம்பரிய தொடு வைத்திய சிகிச்சையும் திருச்சி கிராப்பட்டி புனித தோமையர் கருணை இல்ல வளாகத்தில் 27-10-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

கருணை இல்லத்தில் உள்ள ஆதரவற்ற முதியோர்கள், கருணை இல்லத்தில் உள்ள சிஸ்டர்ஸ் ஆதரவில் இருந்துவரும் முதியோர்களுக்கும், கண் சிகிச்சை, தொடுவைத்திய சிகிச்சைக்காகவும் வருகை தந்த பொதுமக்கள் உள்பட சுமார் 200-க்கும் மேற்பட்ட மக்கள் இந்த மாபெரும் இலவச கண் சிகிச்சை






முகாமில் கலந்து கொண்டனர். கண் சிகிச்சை முகாமில் கண் சம்பந்தமான அனைத்து நோய்களுக்கும் மருத்துவர்கள் பரிசோதனை செய்து கண் சிகிச்சை மேற்கொண்டனர். கண் புரை அறுவை சிகிச்சைக்கு 20-க்கும் மேற்பட்ட நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, மகாத்மா கண் மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சைக்காக அழைத்து செல்லப்பட்டனர்.

முகாமில் மகாத்மா கண் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் கலந்து கொண்டு முழு ஈடுபாடுடன் கண் நோய் சம்பந்தமான பரிசோதனை செய்து மக்கள் பயன் பெற சிகிச்சை அளித்தனர்.

முகாமில் பாரம்பரிய தொடுவைத்திய முறைப்படி Dr.நந்தகுமார் அவர்கள் கலந்து கொண்டவர்களுக்கு நாடி பிடித்து பார்த்து, அவர்கள் உள்உறுப்புகள் மற்றும் நோயின் தன்மை ஆகியவற்றையும் தெரிவித்து, அதற்கான உணவு முறை சிகிச்சை மேற்கொண்டு தீர்வு கண்டு ஆரோக்கியத்துடன் வாழ அறிவுரை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முகாமினை கருணை இல்லத்தைச் சேர்ந்த சிஸ்டர்.சரோஜா அவர்களும், சிஸ்டர்.ரீத்தா சூசை அவர்களும் தொடங்கி வைத்தனர். முகாமில் போலீஸ் பார்வை ஆசிரியர் வெளியீட்டாளர் Dr.N.பாலகிருஷ்ணன், முதன்மை ஆசிரியர் வழக்குரைஞர் K.T.சிவகுமார், இணைஆசிரியர் U.மதனகோபால் மற்றும் தலைமை நிருபர்கள் S.வேல்முருகன், M.பாண்டியராஜன், சிறப்பு நிருபர்கள். S.மணிகண்டன், B. குணசேகரன், நிருபர்கள் பாலமுருகன் S.ஜானகி B.ஸ்ரீனிவாசன், சண்முகராஜ், பாருக் உள்ளிட்டோர் கலந்துகொண்டு முகாமுக்கு வருகை தந்தவர்களை வரவேற்று, அவர்கள் சிகிச்சை பெற உதவி செய்து முகாம் சிறப்பாக நடைபெற செயலாற்றி சிறப்பித்தனர்.

அனைவரது ஒத்துழைப்போடும் போலீஸ் பார்வை குழுமம் நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் பரம்பரை தொடுவைத்திய சிகிச்சை முகாமும் சிறப்பாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# சொத்து அடமானங்கள் செய்யப்படும் முறை

## (Method of Effecting Mortgages)




**1.ஈட்டடமானம் (Simple Mortgage) (பிரிவு 58 (b):**

அடமானம் என்பது, ஒரு கடனைத் திரும்பச் செலுத்தும் பொருட்டு உறுதியீடாகக் குறிப்பிட்ட அசையாச் சொத்திலுள்ள உரிமை ஒன்றினை மாற்றுவதாகும். இத்தகைய உரிமை அடமானங்களின் வடிவங்களைப் பொறுத்து மாறும் ஈட்டடமானம் என்பது அடமான வகைகளில் ஒன்று. இதனைப் பிரிவு 58 (b) விளக்கிக் கூறுகிறது.

அடமானம் செய்பவர் அடமானச் சொத்தின் உடமையை மாற்றிக் கொடுக்காது, தனிப்பட்ட முறையில் தாமே அடமானப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்துகிறார். அதன்படி அடமானப் பணத்தை அவர் கொடுக்கத் தவறினால், அடமானம் பெறுபவர் அடமானச் சொத்தை விற்பனைக்குக் கொண்டுவந்து தமக்குச் சேரவேண்டிய அடமானக் கடன் தொகையை எடுத்துக்கொள்ளலாம். இதற்கு வகை செய்யும்

ஈட்டடமானம் எனப்படும் அடமானம், இப்பிரிவில் கொடுக்கப்பட்ட ஆவணமுறை மெக்பர்சன் என்பவரின் அடமானச் சட்டம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

இனி ஈட்டடமானத்தின் சிறப்பியல்புகளைப் பார்ப்போம்.

**i) ஈட்டடமானத்தின் சிறப்பியல்புகள்:**

1) அடமானம் வைத்தவரிடமே உடைமை இருத்தல்

2)அடமானம் வைத்தவரே அடமானப் பணத்தைத் திரும்பச் செலுத்துவதாகத் தனிப்பட்டமுறையில் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல்.

3) அடமானம் பெற்றவர் அடமானச் சொத்தை விற்ப னைக்குக் கொண்டுவந்து தம்முடைய தொகையை எடுத்துக் கொள்ளுதல்.



**ii). விற்பனை அடமானம் (Mortgage by Conditional Sale)** (பிரிவு 58) (C)

சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 58-வது பிரிவின் உட்பிரிவு (C) விற்பனை அடமானத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. இதன்படி அடமானம் வைத்தவர் அடமானச் சொத்தின் பாத்தியதையை அடமானம் பெறுபவர் பெயருக்கு விற்பனையாகப் புலப்படும் வகையில் மாற்றுகிறார்: ஆனால் குறிப்பிட்ட தேதியில் அடமானக் கடன் தொகை செலுத்தப்படவில்லையெனில், அந்த விற்பனை உறுதியாகிவிடும்; அவ்வாறு செலுத்தியவுடன் சொத்தை வாங்கியவர், பெற்றவர் பெயருக்குச் சொத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும்; இம் மூன்று நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு உட்படுத்திச் செய்யப்படும் அடமானம் விற்பனை அடமானம் எனப்படும்.

இவ்வகையான அடமானம் நம் நாட்டில் நீண்ட நாள்களாகவே இருந்து வருகிறது. இது - இஸ்லாமியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று அவர்களுடைய மதத்தில் கொடுக்கப்பட்ட கடன் மீது வட்டி வாங்குவது அனுமதிக்கப்படுவதில்லையாதலால் இவ்வாறான அடமானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விற்பனை அடமானம் விற்பனையாகப் புலப்படும் வகையில் ஆனால் குறிப்பிட்ட தேதிக்குள் பணத்தைச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இயற்றப்படுகிறது. வெளிப்பார்வைக்கு விற்பனையாகத் தோற்றமளித்தாலும் உண்மையில் இஃது அடமானமே ஆகும். குறிப்பிட்ட தேதியில் பணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையில்தான் இவ்வடமானமே அடங்கியுள்ளது. அதற்குள் செலுத்திவிட்டால் வாங்கியவர் திரும்பவும் வைத்தவர் பெயருக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும். செலுத்தாவிடின் எழுதப்பட்ட விற்பனை உறுதியாகிவிடும். விற்றவர் பணம் செலுத்தத் தவறும்போதும் அடமானம் பெற்றவர் மீட்புரிமை அடைப்புக்க (Forectosure) வழக்குத் தொடுக்கலாம். அவர் இறுதிநிலைத் தீர்ப்பாணை (Final decree) பெறும்வரையில் அடமானம் வைத்தவர் பணம் செலுத்துவதில் தவறியிருந்தாலும் சொத்தினை மீட்டுக்கொள்ள உரிமையுண்டு.

**அடமானத்தின் விற்பனை சிறப்பியல்புகள்:**

1. அடமானம் வைத்தவர் அடமானம் வைக்கப்பட்ட பொருளை விற்பதைபோல மாற்றியிருக்க வேண்டும்.

2. அடமானம் வைத்தவர் பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு விற்றிருக்க வேண்டும். (அ) குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் அடமானப் பணத்தைச் செலுத்தத் தவறினால் விற்பனை உறுதியாகிவிடும் அல்லது (ஆ) பணம் செலுத்தப்பட்டு விட்டால் விற்பனை இல்லாததாகிவிடும் அல்லது (இ)இவ்வாறு பணம் செலுத்தப்பட்டவுடன், வாங்கியவர் விற்றவருக்குச் சொத்தினை மாற்றிக் கொடுக்க வேண்டும்.

3. மேற்கண்ட நிபந்தனைகள், அதே ஆவணத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**iii).சுவாதீன அடமானம் (Usufructuary Mortgage) (பிரிவு 58 (d)**

சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 58 (d) சுவாதீன அடமானத்தைப் பற்றி விளக்கிக் கூறுகிறது. இதன்படி அடைமானம் வைத்தவர் அடமானச் சொத்தை அடமானம் பெறுபவரின் உடைமையில் (சுவாதீனத்தில்) விட்டுவிடுகிறார். அல்லது அவ்வாறு விடுவதாக வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ தம்மைக் கட்டுப்படுத்தி கொள்கிறார். அடமானக் கடன் தொகையைத் திருப்பித் தரும்வரை அச்சொதின் உடைமையை அடமானம் பெறுபவர்வரிடமே வைத்திருந்து அச்சொத்திலிருந்து வரும் வாடகை வருமானங்களை அவற்றில் ஒரு பகுதியையோ, அடமான கடன் தொகைக்கு, அல்லது வட்டிக்கு இவ்வரிண்டில் ஒரு பகுதிக்கு எடுத்துக்கொள்வதற்கு உரிமை பெறுகிறார். இந்த அடமானம் கடன் சுவாதீன அடமானம். (Usufructuary Mortgage) ஆகும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

-**S.கோபாலமணிகண்டன்,**BA.,BL.,ML.,
உயர்நீதிமன்ற மதுரை கிளை
செல்: 94458-91122.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**


JCB, டிப்பர்
வாடகைக்கு
கிடைக்கும்
எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள்,
அடுக்குமாடி குடியிருப்புகள் தரமான
முறையில் கட்டி தரப்படும்
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ்
சிறந்த முறையில் செய்து தரப்படும்
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
Prop: S.அன்வர்தீன் 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு,
பாலக்கரை, திருச்சி- 620 008.

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




–::: தொடர்புக்கு :::–

**786 78 28 203, 638 298 5562**

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO